# இராமநாதபுரம் மாவட்டச் சமரச சுத்த சன்மார்க்கச் சங்கங்கள்

## நன்றியுரை

"இராமநாதபுரம் மாவட்டச் சமரச சுத்த சன்மாக்கச் சங்கங்கள்" என்னும் தலைப்பில் ஆய்வு செய்ய தொடர்ந்து ஊக்கமும், உற்சாகமும் அளித்து என் ஆய்வுக்கு வழிகாட்டியாய் விளங்கிய காந்திய வள்ளலார் தத்துவத்துறை முதுநிலை விரிவுரையாளர் முனைவர் வீரா.அழகிரிசாமி அவர்களுக்கு என் உள்ளங்கனிந்த நன்றியையும், வணக்கத்தையும் உரித்தாக்குகிறேன். மேலும் உரிய காலத்தில் ஆய்வேட்டைச் செம்மை செய்து கொடுத்தமைக்கும் என்னுடைய சந்தோஷத்தை தெரிவித்து கொள்கிறேன்.

என் எம்.பில். படிப்புக்கு முதன் முதலில் ஊக்கமும் தூண்டுதலும் அளித்த பேராசிரியர் ச.செயப்பிரகாசம் அவர்களுக்கும், எளிய வாழ்வு ஏற்றமிகு சிந்தனை என்ற காந்திய சிந்தனை தத்துவத்தை நடத்திய இணைப் பேராசிரியர் முனைவர் ஆண்டியப்பன் அவர்களுக்கும், தேவையான புத்தகங்களையெல்லாம் நூலகத்திலிருந்து வழங்கி தூண்டுதல்செய்த நூலக ஆசிரியர் குருநாதன்......அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன். என்னுடன் எம்.பில்., படித்து சக தத்துவஞானிகளாய் திகழ்ந்து வேண்டும்போதெல்லாம் அன்பையும் ஊக்கத்தையும் அளித்த விருதுநகர் கிரகலெட்சுமி அம்மா அவர்களுக்கும் மதுரை சுசிலா அம்மா அவர்களுக்கும் விருதுநகர் ரேவதி அக்கா அவர்களுக்கும், மதுரை ஆஸா அக்கா அவர்களுக்கும், மதுரை சகோதரர்கள் செந்தில்குமார், இராமஜெயேந்திரன் மற்றும் இடையில் விட்டுச் சென்ற அந்தோணிப் பிச்சை அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

ஆய்வுக்கு உதவும் வகையில் கேட்டவுடன் நேர்காணல் வழங்கிய இராமநாதபுரம் வள்ளலார் அறநிலையத்தின் தலைவர் மதிப்பிற்குரிய திருமிகு ஜோதிமுருகன் ஐயா அவர்களுக்கும், அங்கு பணி புரியும் கணக்கர் வி.எஸ்.நமச்சிவாயம் அவர்களுக்கும் பொள்ளாச்சி மாதவன் ஐயா அவர்களுக்கும், ஜோதி அம்மா அவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறேன்.

என்னோடு இணைந்து நகைத்தொழில் புரியும் எனது இணைய சகோதரர் முத்துராஜா எனக்கு வேண்டும்போதெல்லாம் அனுமதி கொடுத்து மனம் சோர்வடையாமல் என்னுடைய பணிகளையும் சேர்த்து பொறுப்பாக ஏற்றுக் கொண்டு எனது படிப்புக்கும் ஆய்வுக்கும் வேண்டிய உதவிகள் செய்ததை நினைத்து மனநிறைவுடன் அவருக்கு நன்றி சொல்ல மிகவும் கடமை பட்டு இருக்கிறேன்.

ஆய்வில் சோர்வு ஏற்படும்போதெல்லாம் உடன் இருந்து ஊக்கம் கொடுத்த மதிப்பிற்குரிய அருட்செல்வர் ஆர்.இரத்தினம் அவர்களுக்கும், சிறப்பாக செய்யவேண்டும் என்று ஊக்கம் கொடுத்த மதிப்பிற்குரிய ஐயா ஆயுர்வேத ரத்னா டாக்டர் T.K.பலராமன் அவர்களுக்கும் நன்றி கூறி மகிழ்வுறுகின்றேன்.

என்னை இந்த உலகத்தில் அறிமுகப்படுத்த கருவியாக இருந்த என் பெற்றோர்களுக்கும் அகில உலக சமுதாயத்திற்கும் எல்லாவற்றிக்கும் மேலாக எங்கும் நீக்கமற நிறைந்தும், எல்லா பொருட்களிலும் இடங்களிலும் ஊடுருவியும் என்னுள்ளும் நிறைந்து விளங்கும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருடைய கருணைக்கும் நன்றி சொல்லி சரணடைகின்றேன்.

கணிப்பொறியில் ஆய்வேட்டைச் சிறப்பாக அமைத்துக் கொடுத்த செல்லம் பிரிண்டர்ஸ் அச்சகத்தார்களுக்கும் நன்றி.

**சந்தோஷம்**

**ஏ. சரவணன்**

**ஆய்வாளர்**
**அ.சரவணன் எம்.ஏ.,**
**பதிவெண்: A 3801157**

டாக்டர் வீரா.அழகிரிசாமி
முதுநிலை விரிவுரையாளர்
காந்தியியல் இராமலிங்க வள்ளலார் தத்துவத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
நா.ம.ரா.சுப்புராமன் இல்லம்
3, வல்லபாய் சாலை,
சொக்கிகுளம்
மதுரை 625 002.

<u>**நெறியாளர் சான்றிதழ்**</u>

**"இராமநாதபுரம் மாவட்டச் சமரச சுத்த சன்மார்க்க சங்கங்கள்** " என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்படும் இந்த ஆய்வேடு காந்தியச் சிந்தனை மற்றும் அமைதி ஆக்கத்தில் ஆய்வியல் நிறைஞர் (எம்ஃபில்) பட்டத்திற்காக திரு.அ.சரவணன் எம்.ஏ., அவர்கள் சொந்த முயற்சியால் உருவாக்கியது என்றும் இதற்கு முன் இந்த ஆய்வேடு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் வழங்கப்படவில்லை என்றும் மேலும் இவ்வய்வானது மதுரை காமராசர் பல்கலைக்கழகக் காந்தியல் இராமலிங்கர் தத்துவத்துறையின் மூலமாக என்னுடைய வழிகாட்டுதலின் மூலம் நடைபெற்றது எனவும் சான்றளிக்கிறேன்.

**மதுரை-625 002**
**நாள்: 17.11.2004.**

## பொருளடக்கம்

இராமநாதபுரம் மாவட்டச் சமரச சுத்த சன்மார்க்கச் சங்கங்கள்......................1
அருட்பெருஞ்ஜோதி தயவாலயம் தோற்றம் வளர்ச்சி.............................13
இயல் : மூன்று :சேஷாத்திரி மகால்..........................................15
நூல்கள் மற்றும் மூலிகை விற்பனை...........................................16
இயல் : நான்கு வள்ளலார் ஞானசபை....................................22
இராமேஸ்வரம் வள்ளலார் அறநிலையம் மற்றும் உத்தரகோசமங்கை வள்ளலார் அறநிலையம்.................................................................... 25
வள்ளலார் அறநிலைய அமைப்புகள் இருப்பிட விபரம்.................31
பின்னிணைப்பு - III............................................................32

# ஆய்வு முன்னுரை

## தலைப்புத் தேர்வு

வடலூர் இராமலிங்கரின் சமரச சுத்த சன்மார்க்கத்தைப் பரப்பும் நோக்கில் இராமநாதபுரத்திலும் வடலூரிலும் செயல்பட்டுவரும் இராமநாதபுரம் மாவட்ட சன்மார்க்க சங்கத்தின் ஆறு நிறுவனங்களைப் பற்றிய ஒரு தகவல் சேகரிப்பை (Documentation) அடிப்படையாகக் கொண்டு இராமநாதபுரம் மாவட்ட சமரச சுத்த சன்மார்க்கச் சங்கங்கள் என்ற தலைப்பு இவ் (எம்ஃபில்) ஆய்விற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## நோக்கம்

(1) மேற்குறித்த ஆறு நிறுவனங்களின் விவரங்கள் பின்னிணைப்பில் தரப்பட்டள்ளன. அந்த ஆறு நிறுவனங்களின் பங்கு பணி குறித்து மட்டுமே ஆய்வதை நோக்கமாகக் கொண்டு இவ் ஆய்வு அமைகின்றது.

(2) கால வரையறை கருதி இவ் அமைப்புகளின் பல்லாண்டு காலச் செயற்பாடுகள் சுருக்கிக் கூறப்பட்டுள்ளன.

## ஆய்வு நெறிமுறையும் தகவல் சேகரிப்பும்

இவ் ஆய்வு முழுக்க முழுக்க தகவல் களப்பணியை ஒட்டி அமைவதால் உற்றுநோக்கல், பேட்டிகாணல் போன்ற முறை கையாளப்பட்டுள்ளன. கிடைத்த தகவல்கள் விளக்க முறையில் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன.

## ஆய்வுப் பகுப்பு

ஆய்வு முன்னுரை முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களாகக் பகுக்கப்பட்டுள்ளன.

## இயல் : ஒன்று

# தொண்டு - வள்ளலாரின் நோக்கம்

## தொண்டு

உலகெங்கும் மனிதகுலம் விஞ்ஞான வளர்ச்சியினால் வாழ்க்கை வசதிகளைப் பெருமளவில் பெற்றுப் பயனடைந்து வருகிறது. ஆனாலும் மனித குலம் ஒற்றுமையாக, அமைதியாக வாழும் சூழ்நிலையோ நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. மக்களை மக்களே வெறுக்கும் படியான போக்கும், எளியவரை வல்லவர் அடக்கி ஆளவேண்டும் என்ற அதிகார போக்கும், சாதி, மதம், இனம், மொழி, கட்சி போன்றவைகளின் மூலம் மக்களுக்கு வெறியை ஊட்டி மக்களைப் பிரிக்கும் தலைவர்கள் உருவாகி வருவதாலும் மக்கள் இணைந்து பகுத்துண்டு ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி வாழ இயலாமல் சிரமப்படுகின்றனர். ஆகவே,

'மனித இனம் இயற்கை சீற்றங்களாலும், செயற்கைப் பேரழிவுகளாலும் பாதிப்புக்கு உள்ளாகும் போது அவசரக்காலத் துயர் துடைப்பு பணியாகவும், மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிர்மாணப் பணியாகவும், அமைதியை ஏற்படுத்தும் ஆக்கப் பணியாகவும் நீதிக்காக அனைத்து நிலைகளிலும் அகிம்சை வழியில் போராடும் பணியாகும் அமையும் செயல்பாடுகளையே **"தொண்டு"** என்று குறிப்பிடுகின்றன.

1. M.K.பல்கலை M.A. காந்திய சிந்தனை சர்வோதய பாடம் பக்கம்-80

## தொண்டு நிறுவனங்கள்

சிலர் தன்னார்வத்துடன் தாமாக ஒன்றுகூடித் தொண்டு செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு குறிப்பிட்ட ஓர் அமைப்பைப் தொடங்குவதே "தொண்டு" நிறுவனம் என்று குறிப்பர். இதுவே விரிவடைந்து பெரிய அமைப்பாக மாறலாம். தொண்டு நிறுவனங்களைத் தோற்றுவித்த மனிதர்கள் காலப்போக்கில் மறைந்துவிடலாம். ஆனால் சாவுக்கும் அப்பால் நிலைத்து நிற்கின்றன, அவர்களுடைய வாழ்வும் வாக்கும் மற்றும் நிறுவன அமைப்புகளும்.

**"ஆசைகளே துன்பத்திற்கு காரணம் என்ற புத்தன்......**

**அகிம்சையை ஆயுதமாக்கிய மகாத்மா....**

**வெற்றியிலும் அமைதி தேடிய அசோகர்....**

**முடியாது என்ற சொல்லே கூடாது என்ற நெப்போலியன்....**

**உலகையே ஆளநினைத்த அலெக்சாண்டர்.....**

**சமதர்மம் விளக்கிய காரல்மார்க்ஸ்**

**ஜீவகாருண்யமே மோட்சத்தின் திறவுகோல் என்ற வள்ளலார்.....**

**சிலுவையில் அறையப்பட்ட இயேசுவும்.....**

**கல்லால் எறியப்பட்ட முகம்மது நபியும்....."**

இவ்வுலகில் தோன்றி பல சாதனைகளையும், போதனைகளோடு சேவையும் செய்து மக்களுக்கு வழிகாட்டிகளாய் இன்றும் இருக்கின்றனர். எப்படியாயினும் மனிதகுலத்தின் துன்பம் களையப்பட வேண்டும். மனித வாழ்வில் அன்பும், கருணையும் மிகுந்து காணப்பட வேண்டும். இதற்கு ஒரு சில தொண்டு நிறுவனங்கள் சிறப்பாக பணி செய்து வருகிறது.

<u>தொண்டில் ஈடுபடுகின்றவர்களின் பண்பு</u>

இயற்கையின் பரிணாமத்தில் உச்சத்தில் திகழும் ஆறாவது அறிவைப் பெற்ற மனித இனம் ஒன்று மட்டும் தான் தன்துன்பம் போக்கி, பிற உயிர்களின் துன்பத்தைப் போக்கக் கூடிய அறிவையும், ஆற்றலையும் பெற்றதாய் திகழ்கிறது. ஆகவே இயற்கையின் பரிணாமத்தில் ஓரறிவு முதல் ஆறாவது அறிவு வரை அறிவைப் பெற்று பரிணாமம் அடைந்த மனிதன் தன்னால் இயன்ற அளவு உடலால், மனதால், அறிவால் பிறருக்கு பகிர்ந்தும், துன்பம் போக்கியும் ஒத்தும் உதவியுமாக வாழ வேண்டும்.

**"உயிர்களிலே பிற உயிரின் உணர்ச்சி கூர்ந்து**
**உணர்ந்து ஒத்துதவும் பேராற்றல் பெற்ற**
**உயிரினமே மனிதனெனும் உயர் தோற்றம் ஆம்**
**உண்மையினை உணர்ந்தொழுதல் உயர் நோண்பாகும்"**

என்ற வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூற்றுப்படி மனிதன் உணர்ந்து தன்னிடத்தும், பிற ஜீவர்களிடத்தும் அன்புடன் வாழ்ந்து தொண்டின் அன்பை மையமாக வைத்து செயல்பட வேண்டும். தொண்டில் ஈடுபடுபவர்கள் மனமுவந்து வரும் இன்னல்களை எதிர்கொண்டு அகிம்சை வழியில் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று காந்தியடிகள் கூறுவதைப் போல தொண்டில் சேவையில் ஈடுபடுபவர்களை உருவாக்க வேண்டும்.

## 2. ஞானக்களஞ்சியம் 1-பக்கம் -226.

"சத்தியாகிரகத்தில் பகைவனுக்கு தீமை செய்ய வேண்டும் என்ற எண்ணம் சிறிதளவும் இல்லை. தான் துன்பங்களுக்கு உட்படுவதன் மூலம் எதிரியை வெல்லலாம்" என்கிறார் காந்தியடிகள்.

“வெள்ளையரைக் காந்தி ஒரு பொழுதும் எதிரிகளாகக் காட்டியது இல்லை. தன்னை சிறையிலிட்ட ஜெனரல் சுமட்ஸ்க்கு அழகிய காலணிகளைக் காந்தியடிகள் தமது சிறைவாசத்தின் பொழுது செய்து அவரிடம் பரிசளித்தார்! இது சுமட்ஸின் இதயத்தை உருக்கியது. வெறுப்பின் அடிப்படையில் அவர் மக்களை ஒன்றுபடுத்த ஒரு பொழுதும் முற்படவில்லை”

ஆகவே தொண்டில் சேவையில் ஈடுபட்டவர்கள் தன்னை முழுமையாக அர்ப்பணித்து தான் சிறந்த வழிகாட்டிகளாய் திகழ வேண்டும். இதுவே தொண்டில் சிறந்த மாமனித பண்பாகும்.

**<u>வள்ளலார் நோக்கமும் தொண்டும்</u>**

திரு அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகள் (1823-1874) பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் அருளாளர். அவர் அனைவரையும் சன்மார்க்கச் சங்கத்தில் சேர்த்து மனிதன் தன்னிடத்தே உள்ள இறைவனை அறிந்து மகிழ்ச்சியோடு வாழ வழி காட்டவே என்னை இறைவன் வருவித்தான் என்கிறார். இதை அவரே சொல்கிறார்.

3. M.K. பல்கலை காந்திய சிந்தனை-மகாத்மா காந்தியின் வாழ்வும் அடிப்படை நூல்களும் பக்கம் -135
4. M.K. பல்கலை காந்திய சிந்தனை மு.நூல். பக்கம் -150

**“அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்திருந்த உலகர் அனைவரையும்**
**சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித் திடஅவரும்**
**இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ் திடுதற் கென்றே எனைஇந்த**
**உகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப் பெற்றேனே”**

வள்ளற்பெருமான் உலகிற்கு வழங்கிய அழியா முழு முதற்கோட்பாடு ஒன்றே ஒன்றுதான். அதுவே ஜீவகாருண்யம் என்னும் உயிரிரக்கப் பண்பு. அவர் சொல்லிய மரணமிலாப் பெருவாழ்வு கூட தனி மனிதப் பயனாகும். இது ஆறறிவு பெற்ற மனித இனத்தின் தனி வேட்கையாகும். ஆகவே வள்ளலார் சொல்லிய ஜீவகாருண்யமே சமரச சுத்தசன்மார்க்கமாக மாறியது. ஜீவகாருண்யத்தைக் கையாண்டதால் இராமலிங்கர் வள்ளலார் ஆனார். பாடிய பாடல்கள் திருஅருட்பாவாக உள்ளன. அதனால் அருட்பிரகாசர் ஆனார்.

**“பெரியதோர் ஞானம் நான்கிலும் ஆசை**
**முத்தி பெற்றிடவும் பெற்றிலேன்**

**உரியதோர் இச்சை எனக்கிலை என்தன்**
**உள்ளம் நீ அறிந்ததே என்தாய்**

**ஆதலால் இரக்கம் பற்றி நான் உலகில்**
**ஆடலே யன்றி ஓர் விடயக்**

**காதலால் ஆடல் கருதிலேன் விடயக்**
**கருத் தெனக் கில்லை”**

5. திருஅருட்பா ஆறாம் திருமுறை. உற்றது உரைத்தல் பகுதி பக்கம்-271
6. திருஅருட்பாச் சிந்தனை. பக்கம் -2.

எனவே வள்ளலாரை பிரித்துக் காட்டுவது இந்த உயிர் இரக்கப் பற்றே ஆகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கிலும் ஆசை இல்லை என்பதனை தெளிவுபடுத்தி உயிர் இரக்கத்தை காட்டுகிறார். ஆகவே தான் வள்ளல் பெருமான் உலக மானிட இனத்தில் சாதி, மதம், மொழி, இனம் போன்ற எந்த ஒரு வேறுபாட்டையும் காட்டாமல் ஒன்றே ஒன்றை மட்டும் மையமாக வைத்து மக்களை பிரித்துப் பார்க்கிறார். உறவினத்தார் மற்றும் புற இனத்தார் என்று,

**உயிர் கொலையும் புலைபொசிப்பும் உடையவர்கள் எல்லாம்**
**உறவினத்தார் அல்லர் அவர் புற இனத்தார் அவர்க்குப்**
**பயிர்ப்புனும் ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக**
**பரிந்து மற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே**
**நயப்புறு சன்மார்க்கம் அவர் அடையவும் இதுதான்**
**நம் ஆனை என்றைக்கு நவின்ற அருள் இறையே**
**மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில் நாடம் புரியும்**
**மாநடத்தென் அரசேஎன் மாலை அணிந்தருளே”**

என்று வள்ளல் பெருமான் எந்த இடத்திலும் பிரிவையே பேசாதவர் இங்கு கடுமையாக உயிர் கொலை செய்பவர்களும், புலால் உண்பவர்களும் எனது உறவு இல்லாதவர் ஆவர். அவர் நம் சமயஞ்சாராத புற இனத்தவராவர். அவர் நாடி பசி என்று வந்தபோது மட்டும் பசியை போக்கிட உதவுக என்றும் வேறு எதுவும் புரிந்து உதவ வேண்டாம் என்கிறார். அவர்கள் புலால் உண்பதை விடுத்துச் சன்மார்க்க நெறியைப் பின்பற்றும் வரை இதுதான் எனது ஆணை என்று தன்னிடம் கூறிய கடவுளிடம் ஒப்படைத்து விடுகிறார்.

7. ஆறாம் திருமுறை-அருள்விளக்க மாலை பகுதியில் பக்கம் 150.

**கொல்லா விரதம் ஒன்று கொண்டவரே நல்லோர்மற்**
**நல்லாதோர் யாரோ அறியேன் பராபரமே-தாயுமானவர் (பராபரக்கன்னி)**

ஆகவே தான் வேறு, இரக்கம் வேறு என்பதை ஒன்றாக்கி அதாவது உயிரும், இரக்கமும் ஒன்றே என்று உணருகிறேன் என்கிறார். இதனையே,

**“வருமுயிர் இரக்கம் பற்றியே உலகவழக்கில் என் மனம்-சென்றதேனும்**
**வெருவி நின் அடிக்கே விண்ணப்பித் திருந்தேன் விண்ணப்பஞ்-செய்கி**
**ன்றேன் இன்னும்**
**உருவ என் உயிர்தான் உயிர்இரக் கந்தான் ஒன்றதே-இரண்டிலை இரக்கம்**
**ஒருவில் என் உயிரும் ஒருவும்என் உள்ளத் தொருவனே-நின்பதத் தாணை”**

இவ்வாறு ஜீவகாருண்யத்தை வலியுறுத்திய வள்ளலார் மனித குலத்தை வாய்விட்டு குரக்க கூவி அழைக்கிறார் மரணமிலாப் பெருவாழ்விற்கு,

8. வள்ளலார் தத்துவம்-பக்கம் 40. ஆறாம் திருமுறை-பிள்ளைப் பெரு விண்ணப்பம். பக்கம் -94.

**“கண்டதெலாம் அநித்தியமே கேட்டதெலாம் பழுதே**
**கற்றதெலாம் பொய்யேநீர் களித்ததெலாம் வீணே**
**உண்டதெலாம் மலமேஉட் கொண்டதெலாம் குறையே**
**உலகியலீர் இதுவரையும் உண்மையறிந் திலிரே**
**விண்டதனால் என் இனிநீர் சமரசன் மார்க்க**
**மெய்நெறியைக் கடைப்பிடித்து மெய்ப்பொருள் நன் குணர்ந்தே**
**எண்டகுசிற் றம்பலத்தே என்னதே அருள் அடைமின்**
**இறவாத வரம்பெறலாம் இன்பமுறலாமே”**

மேலும்,

**“சுகமறியீர் துன்பம் ஒன்றே துணிந்தறிந்தீர் உலகீர்**
**சூதறிந்தீர் வாதறிந்தீர் தூய்மையறிந் திலிரே**
**இகம் அறியீர் பரம்அறியீர் என்னேநுங் கருத்தீ**
**தென் புரிவீர் மரணம்வரில் எங்குறுவீர் அந்தோ**
**அகமறிந்தீர் அனகமறிந் தழியாத ஞான**
**அமுதவடி வம்பெறலாம் அடைந்திடுமின் ஈண்டே**
**முகமறியார் போலிரந்தீர் என்னை அறி யீரோ**
**முத்தர்ரெலாம் போற்றும் அருட் சித்தர்மகன் நானே”**

9. வள்ளலார் தத்துவம்-பக்கம் 45. ஆறாம் திருமுறை, ஞானசரியை பகுதி. பக்கம்-325.
10. வள்ளலார் தத்துவம்-பக்கம் 46. ஆறாம் திருமுறை, ஞானசரியை பகுதி. பக்கம்-328.

வள்ளல் பெருமான் அவர்கள் சமரச சுத்த சன்மார்க்கம் காட்டி அதில் உயிர் இரக்கம் எனும் ஜீவகாருண்யம் காட்டி இதன் மூலம் மரணம் மிலாப் பெருவாழ்வை அடையலாம் என்ற செய்தியை நன்கு அவரது திருஅருட்பா பாடல் மூலம அறியமுடிகிறது.

**<u>வள்ளலாரின் தொண்டுகள்</u>**

வள்ளலார் 19ம் நூற்றாண்டு சமூக புரட்சியாளர் ஆவார். ஏனென்றால் 6ம் நூற்றாண்டு முதல் 9ம் நூற்றாண்டு வரை பக்தியை பரப்பிய சைவ அருளாளர்கள் நால்வருமே மனிதன் கடவுளை தேட வேண்டும். கடவுளுக்கு தொண்டு செய்ய வேண்டும் அவன் அருளைப் பெற வேண்டும். சைவம் தழைக்க வேண்டும் என்று ஊர் ஊராக சென்று பாடல்கள் பாடி இறைவனின் பெருமைகளை தெரிவித்து இறையனுபவம் பெற்று இறைவனுடன் கலந்தார்கள். ஆனால் வள்ளல் பெருமானோ மனிதன் சக மனிதனிடமும் மற்ற சக ஜீவராசிகளிடத்தும் அன்பு செலுத்தும்

உயிரிரக்க பண்பு எனும் ஜீவகாருண்ய வாழ்வின் மூலம் இறைவனை அடையலாம் என்ற புதிய சித்தாந்தத்தை கண்டு மண்ணுலகில் தொண்டாற்றினார்.

ஜீவகாருண்ய மார்க்கமானது நான்கு நிலைகளையும் கடந்து அப்பால் நிற்கிறது.

1. தாசமார்க்கம்➔ இறைவன் ஆண்டவன்; தான் அடிமை(அப்பர்)(சரியை)

2. சத்புத்ரமார்க்கம் ➔ இறைவன் தந்தை; தான் மகன் (சம்பந்தர்)(கிரியை)

3. சக மார்க்கம் ➔ இறைவனை தோழனாக காணல்(சுந்தரர்)(யோகம்)

4. சன்மார்க்கம் ➔ இறைவனை காதலனாகவும், இன்பத்தை விரும்பி நிற்கும் தன்னை காதலியாகவும் காணுதல் (மாணிக்க வாசகர்) (ஞானம்).

5. சமரசசுத்த சன்மார்க்கம் ➔ இறைவனை சகமனிதரிடமும், சகஜீவராசிகளிடத்தும் காணல் (ஞானம் கடந்த நிலை) (வள்ளலார்),

என்ற சைவ மரபுகளில் கூறப்படும் மார்க்க முறைகளையும் கடந்து ஞானத்தின் உச்ச நிலையில் மனிதன் மனித இனத்தினிடத்தும் மற்ற சகஜீவராசிகளுடனும் கொள்ளும் உயிரிரக்கத்தின் (ஜீவகாருண்யத்தின்) மூலம் இறைவனைக் காணலாம் என்று ஞானம் என்ற எல்லையைக் கடந்த நிலையில் வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்கம் கண்டார்கள். ஆகவே இவர்கள் மனிதர்க்கு ஏற்படும் பசிப்பிணியைப் போக்கும் வள்ளலாக திகழ்கிறார். தொண்டாகவும் செய்தார். இதையே,

**“எட்டரும் பொருளே திருச்சிற்றம் பலத்தே இலகிய இறைவனே உலகில்**
**பட்டினி உற்றோர் பசித்தனர் சுணையால் பரிதவிக் கின்றனர் என்றே**
**ஒட்டிய பிறரால் கேட்டபோ தெல்லாம் உளம்பகீர் எனநடுக் குற்றேன்**
**இட்டஇவ் வுலகில் பசிஎனில் எந்தாய் என்னுளம் நடுங்குவ தியல்பே”**

சிற்றம்பலத்தே விளங்கும் கடவுளே! உலகில் பட்டினியாலும், பசியாலும் பலர் பரிதவிக்கின்றனர் என்று பிறரால் கேட்ட போதெல்லாம் உளம் பகீர் என்று நடுக்குற்றேன். இந்த உலகில் பசி என்று கேட்ட போதெல்லாம் என்னுள்ளம் நடுங்குவது எனது இயல்பு என்று வெளிப்படுத்துகிறார். இத்தோடு நின்று விடாமல் மேலும் ஒருபடி சென்று ஓரறிவு ஜீவ இனம் அடையும் துன்பத்தைக் கூட காண பொறுக்கவில்லையே என்கிறார். இதை

11. ஆறாம் திருமுறை-பிள்ளைப்பெரு விண்ணப்பம் பகுதி. பக்கம் - 84

**“வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன் பசியினால் இளைத்தே**
**வீடிதோ றிரந்தும் பசியறா தயர்ந்த வெற்றோரைக் கண்டுளம் பதைத்தேன்**
**நீடிய பிணியால் வருந்து கின்றோர்என் நேர்வரக் கண்டுளன் துடித்தேன்**

ஈடின்மா னிகளாய் ஏழைகளாய் நெஞ் சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்"

மேலும்,

"காக்கைகள் கூவக் கலங்கினேன் பருந்தின் கடுங்குரல் கேட்டுளம்-குலைந்தேன்
தாக்கிய ஆந்தை குரல்செயப் பயந்தேன் சாக்குரம் பறவையால்-தளர்ந்தேன்
விக்கிய வேறு கொடுஞ்சகு னஞ்செய் வீக்களால் மயங்கினேன்-விடத்தில்
உளக்கிய பாம்பைக் கண்ட போதெல்லாம் துள்ளம் ஒடுங்கினேன் - நடுங்கினேன் எந்தாய்"

12.ஆறாம் திருமுறை-பிள்ளைப்பெரு விண்ணப்பம் பகுதி.பக்கம் - 89
13.ஆறாம் திருமுறை-பிள்ளைப்பெரு விண்ணப்பம் பகுதி.பக்கம் - 85

மேலும்,

"நலிதரு சிறிய தெய்வமென் றையோ நாட்டிலே பலபெயர் நாட்டில்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள் பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே புந்திநொான் துளநடுக்குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில் கண்டகாலத்திலும் பயந்தேன்"

"துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத் தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்
கண்ணினால் ஐயோ பிறஉயிர் பதைக்கக் கண்டகாலத்திலும் பதைத்தேன்
மண்ணிலில் வலையும் தூண்டிலும் கண்ணி வகைகளும் கண்டபோதெல்லாம்
எண்ணி என் உள்ளம் நடுங்கிய நடுக்கம் எந்தேநின் திருவுளம் அறியும்"

ஆகவே வள்ளல் பெருமகனாரின் ஜீவகாருண்யம் மனிதரிடத்தில் மட்டுமல்லாது பயிரிடத்தும், பசித்தோர் இடத்தும், பிணியாளர்களிடத்தும், ஏழைகளாய் நெஞ்சிளைத்தவர் இடத்தும், காக்கை, பருந்து, ஆந்தை, பாம்பு போன்றவைகள் இடும் சப்தத்தினால் என்ன தீங்கு நேரிடப் போகிறதோ என்று பயந்து பல பாடல்கள் பாடியுள்ளதால் அவருடைய ஜீவகாருண்யப் பண்பையும், நன்கு காண முடிகிறது. மேலும் சிறு தெய்வம் கோயில்கலில் இருக்கும் என எண்ணி பலி இடும் ஆடு, மாடு, பன்றி போன்றவைகளை இறைவனுக்கு பலி கொடுக்கும் போது பார்த்த போது மனம் இளைத்ததாகவும், மண்ணில் வலையும், கடலில் கண்ணி வலைகளையும் வீசி அதில் பிடிபடும் ஜீவ இனங்கள் கண்டு உள்ளமே நடுங்குற்றது என்பதை பாடல்கள் மூலம் நன்றாக காண முடிகிறது. ஆகவே மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அருமையாக மக்களை ஜீவகாருண்ய வாழ்வு வாழ அழைப்பதை இங்கு காணலாம்.

14. ஆறாம் திருமுறை-பிள்ளைப்பெரு விண்ணப்பம் பகுதி. பக்கம் -90.

“கட்டோட கனத்தோட வாழ்கின்றோம் என்பீர்
கண்ணோட கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலங்காண் கின்றீர்
குணத்தோடே குறிப்போடே குறிப்பதைக் குறியீர்
எட்டோட இரண்டுசேர்த் தெண்ணவும் அறியீர்
எத்துணை கொள்கின்றீர் முத்துலகீரே”

மேலும்,

“பொய்கட்டிக் கொண்டுநீர் வாழ்கின்றீர் இங்கே
புலைகட்டிக் கொண்டஇப் பொய்யுடல் வீழ்ந்தால்
செய்காட்டி வாழ்கின்ற செருக்கற்று நரகில்
சிறுபுழு ஆகித் திகைத்திடல் அறியீர்
கைகட்டி வாய்பொத்தி நிற்போரைக் கண்டே
கைகொட்டிச் சிரிக்கின்றீர் கருணைஒன் றில்லீர்
எய்கட்டி இடைமொய்க்கும் ஈயினும் சிறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே”

15. ஆறாம் திருமுறை உலகர்க்கு உய்வகை கூறல். பக்கம் -314.
16. ஆறாம் திருமுறை உலகர்க்கு உய்வகை கூறல். பக்கம் - 315

எனவே வள்ளலார் அவர்களின் உள்ளத்தையும், அவரது நோக்கமும் மற்றும் தொண்டும் நம் மனக்கண்ணால் கூட கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. அந்தளவுக்கு இரக்கமும், ஜீவகாருண்ய உணர்வும் உடையவராய் திகழ்ந்திருக்கின்றார். ஆகவே வள்ளல் பெருமான் பிற உயிர்களின் துன்பங்களை போக்குவதையே தொண்டாக கொண்டு அவர்கள்

1. கொல்லாமை

2. புலால் உண்ணாமை

3. ஏழைகளின் பசி தீர்த்தல்

என்ற மூன்று வகை அறங்களையும் செய்து வந்தார். மேலும் தாகம், பிணி, இச்சை, ஏழ்மை, பயம் என்பவற்றால் வரும் துன்பம் போக்கிடுதல் அபரஜீவகாருண்யம் என்றும், பிற உயிர்களுக்கு பசியினால் வரும் துன்பத்தையும், கொலையினால் வரும் துன்பத்தையும் நீக்குவது பரஜீவகாருண்யம் என்று தொண்டாற்றியவர் வள்ளலார். ஆக வள்ளலார் வடலூரில் தருமச்சாலை 1867ம் ஆண்டு துவங்கியது குறிப்பிடத்தக்கது. இன்னும் உணவுய் வழங்கப்பட்டு வருகிறது.

## இயல்: இரண்டு

## அருட்பெருஞ்ஜோதி தயவாலயம் : தோற்றம் வளர்ச்சி

### மண்ணின் பெருமை

வள்ளலார் அறநிலையம் தோன்றிய இடம் இராமநாதபுரம். இது மாவட்ட தலைநகர் ஆகும். இவ்வூர் பல புண்ணிய திருத்தலங்களுக்கு மத்தியில் அமைந்த பெருமையுடைய ஊர். கிழக்கே சிவத்தலமான **இராமேஸ்வரம்.** இங்கு அஷ்டாங்க(பதஞ்சலி) யோக சூத்திர தந்தை பதஞ்சலி சித்தர் ஜீவசமாதி ஆன திருத்தலம் ஆகும். மேற்கே "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" எனும் திருவாசக பாடல்களுக்கு சிறப்பு சேர்த்த மாணிக்கவாசகர் நீத்தல் விண்ணப்பம் பகுதியில் பல பாடல்கள் பாடி சிறப்பு பெற்ற தலம் **திரு.உத்தரகோச மங்கை** ஆலயம். இங்கு மரகத சிலையிலான நடராஜர் அமைந்திருப்பது சிறப்பு. ஆருத்திரா தரிசனத்தின் போதுமட்டும் தான் காணலாம். தெற்கே திருப்புல்லாணி, சேதுக்கரை போன்ற இடமும், வடக்கே நயினார் கோவில் மற்றும் தேவிபட்டிணம் போன்ற திருத்தலங்களை பெற்ற மத்தியப் பகுதி தான் இராமநாதபுரம். 17ஆம் நூற்றாண்டு சன்மார்க்க ஞானி தாயுமானவர் மௌன குருவிடம் தீட்சை பெற்று பல சிவத்தலங்களை வழிபட்டு இறுதியில் இராமநாதபுரம் வந்தனைந்தார். அவ்வூரின் கீழ்ப்பாகத்தில் உள்ள **"காட்டூரணி"** என்னும் இடத்தில் புளியமரம் ஒன்றின் நிழலில் தங்கி சிவயோக நிஷ்டையில் கூடி இருந்தார். இப்போது அவ்விடம் **இலட்சுமியும்** என வழங்கப்படுகிறது.

### இறையடிகூடல்

தாயுமான சுவாமிகள் பல நாட்கள் சிவயோக நிஷ்டையில் இருந்தபோது, அவர் திருமேனி உயிர்நீத்த உடல்போல தோன்றியமையால், அவர் தேக வியோகம் ஆனதாகக் கருதி அவர்தம் உடலுக்கு எரியூட்டினர் என்றும், தீப்பற்றிய பொழுது அடிகள் கண்விழித்துப் பார்த்து நிகழ்ந்ததை உணர்ந்து அங்ஙனமே இறைவனோடு இரண்டறக் கலந்தார் என்கிற செவிவழி செய்தி வழங்கி வருகிறது.

ஆகவே ஞானிகள் வாழ்ந்த பூமியாக இராமநாதபுரம் கருதப்படுகிறது. இருந்தாலும் சித்தர்களின் தலைவரான திருமூலர் கூற்றுப்படி ஞானிகளின் உடலை எரித்தல் கூடாது. அவர்களை சமாதி செய்ய வேண்டும். அப்படி ஞானிகளின் உடலை தீயிலிட்டு எரித்தால் அந்நாட்டு மக்கள் வெப்பு நோயினால் வருந்துவர் என்றும் மழையின்றி நாட்டிற் பஞ்சமுண்டாகும் என்றும் கூறுகிறார் தனது திருமந்திர பாடலில். ஆகவே திருமூலர் சித்தர் வாய்மொழிக்கிணங்க இராமநாதபுரம் வறட்சி மாவட்டமாக காணப்படுகிறது என்பதை ஆழ்ந்த மெய்ஞான சிந்தனையோடு ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

**"அந்தமில் ஞானிதன் ஆகம் தீயினில்**
**வெந்திடில் நாடெல்லாம் வெப்புதீயினில்**
**கொன்றது நாய் நரி நுகரின் நுன் செரு**
**வந்து நாய் நரிக்குணவாகும் வையமே"-என்றும்**

1. திருவருட்பா சிந்தனை, திருமந்திரப்பாடல் பக்கம் 301.

**"எண்ணிலா ஞானியுடல் எரிதாவிடில்**

**அண்ணல் தம் கோயில் அழலிட்டது ஒக்குமால்**
**மண்ணின் மழைவிழா வையகம் பஞ்சமாம்**
**எண்ணரு மன்னர் இழப்பர் அரசே”**

என திருமந்திர பாடல் குறிப்பிடுகிறது.

ஆகவே தான் இயற்கையானது இப்பேரிழப்பை தவிர்க்க, ஜீவகாருண்யம் மேலோங்க வள்ளலார் அறநிலையம் தோன்ற வழிவகுத்து இருக்கிறது என எண்ண வேண்டியுள்ளது.

## <u>அருட்பெருஞ்ஜோதி தயவாலயம் - தோற்றம்</u>

### <u>வித்து முளைத்த விதம்</u>

இராமநாதபுரத்தில் உள்ள சொக்கநாதர் திருக்கோயிலில் 1971ம் ஆண்டுக்கு சிலகாலம் முன்பிருந்து கோயிலின் வழிபாட்டு நேரங்களிலும், மாதப் பூச தினங்களிலும் வள்ளலார் அவர்களது பாடல்களும், அகவலும் பாடப்பெற்று சன்மார்க்கம் பற்றிய நற்செய்திகளை மக்களுக்கு சன்மார்க்க அன்பர்கள் வழங்கி வந்துள்ளனர். பிறகு சிலகாலம் கழித்து திருக்கோயில்களிலே மாதப்பூச தினத்தில் அகவல்பாராயணமும், சொற்பொழிவும் நடத்தி அங்கே இனிப்பும், உணவும் வழங்கப்பட்டு வந்துள்ளனர். இதனுடைய தொடர் வளர்ச்சியின் காரணமாக பின்பு இந்நிகழ்ச்சியும் இடமும் இறைக் கருணையினால் மாற்றியமைக்கப்பட வேண்டி இருந்திருக்கிறது.

2. திருவருட்பா சிந்தனை, திருமந்திரப்பாடல் பக்கம் 301.

### <u>அமைப்பு துளிர்த்தது</u>

இராமநாதபுர மாவட்ட சன்மார்க்க சங்கத்தினரின் முயற்சியாலும், உதவியினாலும், அருட்பெரும் ஜோதி ஆண்டவருடைய கருணையினாலும் ஒத்த சிந்தனை, உணர்ச்சி, செயல் மூன்றும் ஒன்றிணைந்து செயல்பட்டு “வள்ளலார் அருட்பணி மன்றம்” என்ற பெயரைக் கொண்டு முதன் முதலில் செயல்பட ஆரம்பித்தது.

### <u>அருட்பெருஞ்ஜோதி தயவாலயம்</u>

வள்ளலார் அருட்பணி மன்றத்தினர் பெரு முயற்சியாலும், கருணை திறத்தாலும் 6-10-1991 பிரஜோத்பத்தி புரட்டாசி 20 ஞாயிறு அன்று காலையில் அகவல்பராயணம் பாடி சன்மார்க்க சங்கத்தினர் முன்னிலையில் திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா அவர்கள் அணையா தீபம் ஏற்றி வைத்து அந்த தயவாலயக் கட்டிடத்தை திறந்து வைத்தார்கள். அப்போது “வள்ளலார் அருட்பணி மன்றம்” என்ற பெயரில் கட்டிடம் திறந்து வைக்கப் பெற்றது.

### <u>‘தயவாலயம்’ துவக்கப்பட்ட இடமும் நிலையும்</u>

இந்த இடம் இராமநாதபுரம் பேருந்து நிலையத்திலிருந்து வடக்கே 1 கிலோ மீட்டர் தொலைவில் தேவி பட்டினம் சாலையின் கிழக்கே கேணிக்கரை எனும் இடத்தில் அமைந்துள்ளது. இவ்விடம் சுமார் 20 செண்ட் பரப்பளவு கொண்டதாகும். இவ்விடத்தை

சேலம் A.K.ஜீவரத்தினம் D.R.O அவர்களும், அவர்களது உறவினத்தார்களும் சேர்ந்து மனமகிழ்வுடன் தயா உள்ளத்தோடு வள்ளலார் அருட்பணி மன்றத்தினருக்கு வழங்கியுள்ளார்கள்.

இவ்விடம் அவர்களது குல தெய்வமான அருள்மிகு வீரபத்திர சுவாமி திருக்கோயிலாக முன்பு இருந்தது. இதில் வருடந்தோறும் நடக்கும் சிவராத்திரி தினத்திலும் முக்கிய விசேச தினங்களிலும் வழிபட்டு செல்லும் திருக்கோயில் தலமாக திகழ்ந்தது. பின் இவர்கள் தயவாலயத்திற்கென்றே இடத்தை கொடுத்து விட்டார்கள்.

இப்போது வள்ளலார் அருட்பெருஞ்ஜோதி தயவாலயம் என்னும் பெயரோடு அருள்மிகு வீரபத்திர சுவாமி திருக்கோவிலையும் உள்ளடக்கியதாக செயல்பட்டு வருகிறது.

**ஊர்வலம்**

6-10-1991 ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை மாலையில் சன்மார்க்க அன்பர்கள் சார்பில் நகர் ஊர்வலம் நடைபெற்றது. அதன் இடையில் யானையும் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது. யானை மீது விரிக்கும் **"பதாகை"** யில்

**"உலகத்தில் நான் பெரியவன் ஆனால்**
**நான் புலால் சாப்பிடுவதில்லை"**

என்ற செய்தியை தாங்கியபடி யானையும் ஊர்வலமாக வந்தது என்று தயவாலயத் தலைவர் திருமிகு. ஜோதிமுருகன் ஐயா கூறினார்கள். இதில் சின்னாளப்பட்டி சன்மார்க்க ஆண்களும், பெண்களும் மற்றும் இராமநாதபுர மாவட்ட சன்மார்க்க அன்பர்களும் திரளாக கலந்து சிறப்பித்தார்கள்.

**சத்சங்கம்**

சன்மார்க்க அன்பர்கள் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஒன்றுகூடி திருமறைபாடல்கள் பாடி அங்கு சத்சங்கமும் தியானமும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. பின் மாதப்பூசம் தோறும் அகவல் பாராயணம் பாடி சிறப்பித்து அருட்பணி மன்றம் செயல்பட ஆரம்பித்தது. பின் சன்மார்க்க அன்பர்களின் விருப்பங்களுக்கிணங்க வள்ளலார் கொள்கையை முன்வைத்து ஆதரவற்ற குழந்தைகளின் பால் ஏற்பட்ட கருணையின் காரணமாக 1994-1995ம் ஆண்டில் ஆதரவற்ற பள்ளிக் குழந்தைகளைக் கொண்டும், ஆதரவற்ற முதியோர்களைக் கொண்டும் அருட்பணி மன்றம் "**அருட்பெருஞ்ஜோதி தயவாலயமாக**" மாறி செயல்பட ஆரம்பித்தது.

## தொடக்கமும் வளர்ச்சியும்

1994-1995 ஆம் ஆண்டில் 9 ஆதரவற்ற பள்ளிக் குழந்தைகளை கொண்டும் 2 முதியவர்களைக் கொண்டும் செயல்பட ஆரம்பித்தது. பின்னர் அதே ஆண்டில் 23 மாணவர்களையும் 10 முதியவர்களையும் கொண்டு செயல்பட ஆரம்பித்தது.

பின்னர் அருட்பெருஞ்ஜோதி தயவாலயத்தில் சன்மார்க்கிகளின் உதவியால் தியான மண்டபம், மாணவர் இல்லம், சத்விசாரமேடை, அலுவலக கட்டிடம், குளியலறை, கழிப்பறை, நூலகம், கிணறு, பம்புசெட், தோட்டம் மற்றும் மூலிகை வளர்ப்பு என்று மிக சிறந்த முறையில் இவற்றையெல்லாம் உள்ளடக்கியதாக தயவாலயம் செயல்பட்டு வருகிறது.

வள்ளலார் அருளிய திருஅருட்பா புத்தகங்களும், பாடல் கேசட்டுகளும், சுவாமி சரவணானந்தா அவர்களின் பல நூல்களும் அங்கு கிடைக்கிறது. மேலும் திண்டுக்கல் சின்னாளப்பட்டியில் தயாரகும் மூலிகை பொடிகளும் விற்பனைக்கு உள்ளது.

நேரங்கிடைக்கும் போதெல்லாம் சன்மார்க்க அன்பர்கள் காலை, மாலை நேரங்களில் தியானம் மேற்கொண்டு இன்றும் பயனடைந்து வருகிறார்கள். அமைதி சார்ந்த சூழலில் இவ்விடம் அமைந்துள்ளது.

இங்கு தூதுவளை, நந்தியாவட்டை, ஆடாதொடை, மருதானி, லெச்சகெட்டை, கற்றாழை, கொடிவேலி, முருங்கை, மலைவேம்பு, நெல்லிக்காய் மற்றும் 2 வேப்பமரம், 4 தென்னை மரம் உள்ளடக்கிய இடமாக திகழ்கிறது.

இவ்வாறு சீரிய முறையில் செயல்படும் தயவாலயம் விரிவு செய்யப்பட்டு, வேறு ஒரு இடத்தையும் பெற்று அங்கு வள்ளலார் அறநிலையம் என பெயரிட்டு தயவுப் பணிகள் சிறப்பாக நடந்து வருகிறது.

3. 5-10-97 ல் வெளியிட்ட செயல் விளக்க அறிக்கை
4. மாணிக்கம்பிள்ளை அவர்களுடன் நேர்காணல் 24.9.2004

# இயல் : மூன்று

## சேஷாத்திரி மகால்

அருட்பெரும்ஜோதி தயவாலயம் 1991 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு பல நற்பணிகளை செய்து வரும் இவ்வமைப்பு மேலும் பல அறப்பணிகளை செய்ய வேண்டும் என்ற நோக்கிலும் வள்ளலார் பற்றிய கொள்கைகளை உலகரிய செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடும் செயல்படும் தயவாலயம், சன்மார்க்கிகளின் உதவியாலும், அருட்பெரும்ஜோதி ஆண்டவருடைய கருணையினாலும் இராமநாதபுரம் மேற்கு, முகவை ஊரணி கரையில் அமைந்துள்ள

“சேஷாத்திரி மெமோரியல் ஹால்” என்ற கட்டிடத்தை குத்தகைக்குப் பெற்று 1-9-1997 ம் ஆண்டு உயர்திரு M.A. காதர் Ex.M.P., திருமதி பவானி ராஜேந்திரன், அட்வகேட்டுகள் திரு.கோதண்டராமன், திருமலை சடகோபன் மற்றும் கண் டாக்டர் பெ.சந்திரசேகரன் முன்னிலையில் அங்கு “அணையாதீபம்” ஏற்றப்பட்டு வள்ளலார் அறநிலையமாக இவ்விடம் செயல்பட்டு வருகிறது.

“சேஷாத்திரி மெமோரியல் ஹால்” கிழமேல் 171 அடியும், தென்வடல் 33 அடியும் கொண்ட பழமையான கட்டிடமாக திகழ்கிறது. இக்கட்டிடம் ஸ்ரீசீனிவாச ஐயங்கார் தம்முடைய தகப்பனார் நினைவாக 12.7.1944ல் திறக்கப்பட்டது. இதில் தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் உள்ளடக்கிய சுமார் 700 புத்தகங்களை உள்ளடக்கிய நூலக கட்டிடமாகவும் திகழ்கிறது. இது சேஷாத்திரி மெமோரியல் டிரெஸ்டுக்கு சொந்தமானது இக்கட்டிடம்.

நூலகத்தோடு உள்ளடங்கிய கட்டிடத்தை அதன் தலைவர் அட்வகேட் திரு.கோதண்டராமன் மற்றும் செயலர் திரு. சடகோபன் ஆகியோரை அணுகி இக்கட்டிடம் 1997 ஆம் ஆண்டு பெறப்பட்டது. தற்போது ரூபாய் 1000/- வாடகை கொடுத்து “வள்ளலார் அறநிலையம்” என்ற பெயரில் சிறந்த முறையில் பணி செய்து வருகிறது.

<u>மாணவர்கள் மற்றும் முதியவர்கள்</u>

ஆதரவற்ற மாணவர்களும், ஆதரவற்று உழைக்க முடியாத நிலையில் உள்ள முதியவர்களுக்கும் ஆதரவளிக்கும் இடமாக அமைந்து சேவைகள் செய்து வருகிறது.

இங்கு 16 மாணவர்களும், 5 முதியவர்கள் மற்றும் 4 பணியாளர்கள் உள்ளிட்ட இடமாக திகழ்கிறது. இங்கு 2ம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரை பயிலும் மாணவர்களும், I.T.I படிக்கும் மாணவர்களும் உள்ளனர்.

மாணவர்கள் சேதுபதி நடுநிலைப் பள்ளியிலும், சபா நடேசர் நடுநிலைப் பள்ளியிலும், ஸ்ரீ ராமானுஜர் ஆதாரப் பள்ளியிலும், ஸ்வாட்ஸ் மேல்நிலைப் பள்ளியிலும், கணபதி I.T.I. மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திலும் கல்வி பயின்று வருகிறார்கள்.

<u>நூல்கள் மற்றும் மூலிகை விற்பனை</u>

சேஷாத்திரி மெமோரியல் ஹாலில் வள்ளலார் சம்பந்தம் தொடர்பான அனைத்து நூல்களும், படங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் சுவாமி சரவணானந்தா அவர்களின் நூல்களும் மற்றும் ஆன்மீக சம்பந்தமான இதர நூல்களும் வைக்கப்பட்டுள்ளது. இங்கு வள்ளல் இராமலிங்கம் சித்த வைத்திய சாலை, சின்னாளப்பட்டி Dr.S. அசோகன் RIMP, SMP, DNYS, B.S.C., PGDBM, மற்றும் S/O.Dr.S.P.K. சபாபதி S.M.P. ஆகியோர் தலையில் தயாரகும் மூலிகை பொடிகள், தைலங்கள், பற்பொடி, கேப்சூல்ஸ் மற்றும் சூரணங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இங்கு கணக்கராக V.S. நமச்சிவாயம் அவர்கள் உள்ளார்கள். சேஷாத்திரி நூலகத்தில் இருந்த நூல்களை அகர நிரல்படி தமிழ் மற்றும் ஆங்கில நூல்களை பிரித்து வகைப்படுத்தி, பொது மக்கள் எளிதாக பயன்படுத்தும் வகையில் செல்வி N.துவாதசாந்தம் B.S.c., அவர்கள் அந்தப் பணியை செய்து வருகிறார்கள். மேலும் ஓய்வு நேரத்தில் மாணவ மாணவிகளுக்கு டியூசன் சொல்லித் தரும் பணியையும் மேற்கொள்கிறார். மேலும் இங்கு தன் வாழ்க்கையை சேவைக்கென அர்ப்பணித்து வாழும் சகோதரி லெட்சுமி அவர்களின் பணி போற்றுதலுக்குரியது. இவர்கள் திண்டுக்கல் மாவட்டம் குசவப்பட்டி கிராமத்தில் இருந்து வந்து இங்கு மாணவர்களுக்கு பிரார்த்தனை பாடல்களும் கல்விப் பாடங்களையும் மற்றும் மாணவர்களின் பராமரிப்பு பணியிலும் இருந்து செயலாற்றுகிறார்கள்.

**<u>மாணவர்களுக்கும் மற்றும் முதியவர்களுக்கும் உதவும் மருத்துவர்கள்</u>**

1. Dr. G.பழனியப்பன் M.B.B.S., Orthi Specialist
2. Dr. T.திருமலைவேலு M.B.B.S. ENT Specialist
3. Dr. T.இராஜேஸ்வரி M.B.B.S., மகப்பேறு மருத்துவர்
4. Dr. D.அரவிந்தராஜ் M.B.B.S., M.D.,
5. Dr. A.மதுரம் அரவிந்தராஜ் M.B.B.S.,
6. Dr. பாத்திமா சின்னதுரை M.B.B.S.,
7. Dr.B. வித்யாபிரியதர்சினி ஹோமியோபதி மருத்துவர்

இம் மருத்துவர்கள் அனைவரும் வள்ளலார் அறநிலைய மாணவர்களுக்கும், முதியவர்களுக்கும் மருத்துவ சிகிச்சை இலவசமாக செய்து வருகிறார்கள்.

**<u>முதியோர் ஆற்றும் பணிகள்</u>**

அறநிலையத்தில் உள்ள முதியோர்களில் சிலர், தாமாக விருப்பப்பட்டு சிறு சிறு வேலைகளிலும், இடம் சுத்தம் செய்தல், மூலிகை பராமரிப்பு போன்ற வேலைகளையும் செய்கிறார்கள்.

**<u>மாணவர்களின் பிற பணிகள்</u>**

1. முதியவர்களுக்கு உதவுதல்
2. நன்கொடைகள் வசூலித்தல்
3. இல்லங்களுக்கு சென்று பிடி அரிசி சேமித்தல்
4. இலவச உணவு வழங்க செல்லுதல்
5. தோட்ட மூலிகை பராமரிப்பு செய்தல்

**<u>பொதுமக்கள் நன்கொடை</u>**

சன்மார்க்க நண்பர்களின் நன்கொடையால் பெரிதும் “வள்ளலார் அறநிலையம்” பல பணிகளை சிறப்பாக செய்து வருகிறது. சன்மார்க்கிகள் சுய விருப்பத்தின் பேரில் தமது திருமண நாள் மற்றும் பிறந்த நாளின் போது ரூ.500 செலுத்தி குழந்தைகளுக்குச் சிறப்பு உணவுத் திட்டத்திற்கு என நன்கொடை தருகின்றனர்.

சிலபேர் பிரதி மாதந்தோறும் தன்னால் இயன்ற அளவு பண உதவி செய்து வருகின்றனர். மேலும் சன்மார்க்க பெண்கள் ஒன்று சேர்ந்து “பிடி அரிசி திட்டம்” என்பதின் மூலம் அரிசி சேகரித்து தருகின்றனர். “ஞானதீப சேவா சங்கம்” இளைஞர்களும் பிடி அரிசி திட்டத்தின் கீழ் அரிசி வழங்கி வருகிறார்கள்.

தைப்பூசத்தின் போது பல ஊர்களில் வசிக்கும் சன்மார்க்க சங்கத்தினர் மூலம் நன்கொடை பொது மக்களிடம் பெறப்பட்டு வழங்கி வருகிறார்கள்.

பிரதி ஆண்டு தைப்பூசத்திற்கு என சில பேர் பச்சரிசி, புளுங்கல் அரிசி, துவரப்பருப்பு, காய்கறி போன்றவை வழங்கி வருகிறார்கள்.

**<u>இவ்வாண்டு நன்கொடை</u>**

அ. K.R.G. பைனான்ஸ் உரிமையாளர் செழியன் அவர்கள் இவ்வாண்டு 2004ல் முதியவர்களுக்கும் சேலையும் வேஷ்டியும், மாணவர்களுக்கு பள்ளி சீருடையும் வழங்கினார்கள்.

ஆ. ஆப்டிகல் பேலஸ் உரிமையாளர் மற்றும் நண்பர்கள் மாணவர்களுக்கு புத்தாடை தைத்து வழங்கினார்கள்.

1. ஜோதிமுருகன் ஐயாவுடன் நேர்காணல். 22.9.2004. இராமநாதபுரம், சேஷாத்திரி மகால்.

இ.Lions Club மற்றும் ரோட்டரி கிளப் புதியதாக பதவி ஏற்கும் போது தேவையான பாத்திரங்கள் மற்றும் அரிசி வழங்கி வருகிறார்கள். தேவையின் அடிப்படையில் பள்ளி சீருடைகளும் வழங்கி வருகிறார்கள்.

ஈ. ரோட்டரி கிளப் மூலம் கிடைத்த பொருளாதாரம் கொண்டு மெழுகுரிதி, சாம்பிராணி தயாரித்தல் தொழில் நடைபெறுகிறது (2003-2004)

உ. சன்மார்க்கி ஸ்ரீதர் (ஸ்டேட் பேங்க ஊழியர்) பிரதி மாதம் 8கிலோ கொண்டக்கடலை வழங்குகிறார்.

ஊ. தாயுமானவர் தபோவனம் வாரத்திற்கு 6 தேங்காய் கொடுக்கிறார்கள்.

எ. அறநிலையத்தில் தங்கியுள்ள முதியோர்கள் வாங்கும் ஓய்வூதிய பணத்தில் தனக்கென செலவுக்கு பணம் வைத்துக் கொண்டு மீதி சிறுதொகையை வழங்குகிறார்கள்.

**<u>அரசாங்க அரசின் மூலம் உதவி</u>**

பிரதி ஆண்டும் உள்ள மாணவ, மாணவியர் இதர பணியாளர் எண்ணிக்கை அடிப்படையில் தமிழக அரசு ரேசன் அரிசி (கிலோ 3.50 வீதம்) விலைக்குப் பெற அனுமதி கொடுத்து ஆதரித்து வருகிறது. வேறு எந்த வகையான அரசு உதவியும் பெறப்படவில்லை.

தற்போது 414 கிலோ அரிசி பெறப்படுகிறது. உணவு வழங்கல் துறையின் மூலம் முதன் முதலில் **மாவட்ட கலெக்டர் சன்வந்திரா** மற்றும் சக்கரவர்த்தி மூலம் ரேசன் அரிசி பெறப்பட்டது.

2. ஜோதிமுருகன் ஐயாவுடன் நேர்காணல், 22.9.2004. இராமநாதபுரம் சேஷாத்திரி மகால்.

**<u>நிதி பற்றாக்குறை</u>**

ஆறு அறநிலையங்களுக்கும் பிரதி மாதம் 60,000 செலவு ஆய்கின்றது. மேலும் பராமரிப்பு செலவுக்காக வாங்கிய விதத்திலும் நிலுவை தொகையாக........ ரூ.40,000/- உள்ளது. இதைச் சமன் செய்ய பொது மக்களிடம் நற்செயல்களில் தங்களையும் இணைத்துக் கொண்டு புண்ணியப் பயன் பெற தயவுடன் அழைக்கின்றார்கள்.

**<u>அறநிலையத்தில் மரணமடைந்த முதியோர்கள்</u>**

ஆதரவற்று உழைக்க முடியாத நிலையில் சேர்ந்து சில ஆண்டுகள் கழித்து மரணம் அடைந்தவர்களை அறநிலையம் சார்பில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

1. கருப்பையா பிள்ளை 75 வயது
2. வேலாயுதம் டெய்லர்
3. சரஸ்வதி அம்மாள்
4. தியாகி K.P.நாகலிங்கம்

ஆகியோரை வைத்து பராமரித்து மருத்துவ உதவியாலும் பயன்கிட்டாநிலையில் மரணம் அடைந்த பின் அவர்களை அறநிலையமே கருப்பையா பிள்ளை, வேலாயுதம் டெய்லர், சரஸ்வதி அம்மாள் ஆகியோரை இராமநாதபுர மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

தியாகி நாகலிங்கம் அவர்களை அவர்களின் விருப்பத்தின் பேரில் ஆற்றங்கரையில் உள்ள வள்ளலார் ஞானசபையின் வெளிப்பகுதியில் அடக்கம் செய்யப்பட்டது.

வள்ளலார் சொன்ன முறையில் அடக்கம் செய்து இறுதிபுறச் சடங்குகள் ஏதும் செய்யாமல் அகவல்பாடி அடக்கம் செய்யப்பட்டது.

**<u>வள்ளலார் அறநிலையத்தின் குறிக்கோள்கள்</u>**

1. அகில உலக சகோதரத்துவம் போற்றுதல்
2. ஆன்மநேய ஒருமைப்பாடு காணுதல்
3. தனி மனித ஒழுக்கம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
4. ஒரே கடவுள் வழிபாடு (ஜோதி வழிபாடு)
5. கொல்லாமை
6. புலால் மறுத்தல்

7. ஜீவகாருண்யம்
8. உயிரிரக்கம் என்ற பண்பின் மூலம் அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி மரணம்மிலா பெருவாழ்வு வாழ்தல்
9. ஏழைகளின் பசி தீர்த்தல்
10. சேவையில் ஈடுபாடு உள்ள இளைஞர்களை தேர்ந்தெடுத்து முறையான பயிற்சி தந்து அறநிலையச் சேவையில் மகிழ்ச்சியுடன் ஈடுபடச் செய்தல்.
11. எதிர்காலத்தில் அமைதி மற்றும் மகிழ்ச்சியுடன் கூடிய வாழ்க்கையை அமைத்து கொள்ளும் வகையில் மதிப்பு மிக்க தரமுடைய கல்வியை அளித்தல்.
12. தொடர்ந்து சேவை செய்வதுடன் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி மேலும் அறநிலையத்தின் குறிக்கோள்கள் நிறைவு செய்வதற்கான தேவையான உதவிகளைப் பெறுதல்

<u>**வள்ளலார் அறநிலையத்தின் சிறப்பு பணிகள்**</u>

1. பிரதி புதன் கிழமை தோறும் (இராமநாதபுரம் வாரச் சந்தை கூடும் நாள்) இராமநாதபுரம் நகருக்கு யாசகம் கேட்டு வரும் 125 வறியவர்களுக்கு மதிய ஆகாரம் பொட்டலங்கள் மூலம் கொண்டக்கடலை சுண்டலுடன் அளிக்கப்படுகிறது.
2. தினமும் 25 வறியவர்களுக்கு காலை ஆகாரம் பொட்டலங்கள் மூலம் ரயில்வே ஸ்டேசன் பகுதியில் உள்ள வறியவர்களுக்கு அளிக்கப்படுகிறது.
3. பிரதி ஆண்டும் பங்குனி உத்திர விழாவின் போது இராமநாதபுரத்திலும், திரு ஆரூத்ரா தரிசன விழாவின் போது திரு உத்திரகோசமங்கையிலும், விரிவான அன்னதானம் செய்து வருகிறது.
4. சேஷாத்திரி மகாலில் உள்ள நூலகம் பொது மக்களும் பயன் பெறும் வகையில் செயல்படுகிறது. இங்கு Hindu மற்றும் தினமணி பத்திரிக்கை தினந்தோறும் வாங்கப் பெற்று பொது மக்களும் படித்து பயன்பெறுகிறார்கள்.
5. இராமநாதபுரம் நகரில் உள்ள ஆலயங்கள் மற்றும் திரு உத்திரகோசமங்கை, திருப்புல்லானி ஆகிய புண்ணியதலங்களில் பிரதி ஆண்டும் விரிவான முறையில் உழவாரப் பணி (கோவில் சுற்றுப்புறத் தூய்மை) மேற்கொண்டு வருகிறது. இதில்

   "இராம பக்த சபா இளைஞர்கள்" மற்றும் இந்து மாணவர் விடுதி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சன்மார்க்க அன்பர்கள் மூலம் பிரதி வருடத்திற்கு மூன்று நாட்கள் உழவாரப் பணி நடைபெறுகிறது.

6. வறுமையில் வாடும் சில குடும்பங்களுக்கு பிரதி மாதம் அரிசி வழங்கியும், நிதி வழங்கியும் ஆதரித்து வருகிறது.
7. பரமக்குடியில் வறுமையால் வாடும் தொழுநோயாளிகளுக்கு பிரதி மாதம் உணவுக்கு அரிசி வழங்கி ஆதரவு நல்கி வருகிறது. (I.T.I. எதிர்புறம் உள்ள தொழுநோயாளிகளின் தங்கும் மனைகளில்)
8. இலவச மருத்துவ முகாம் நடத்துதல், சன்மார்க்க மூலிகை மருந்துகள், சன்மார்க்க விளக்க நூல்கள் மக்களுக்கு கிடைக்கச் செய்தல்,

வள்ளலார் நாட்காட்டி வெளியிடுதல், வள்ளலார் நூலகப் பராமரிப்பு போன்ற பணிகளையும் செய்து வருகிறது.

9. தகுதியுடைய நபர்களுக்கு அரசு மூலம் முதியோர் உதவித் திட்டம் மூலம் உதவித் தொகை பெற்றுத் தர உதவி செய்து வருகிறது.
10. தேசப்பிதா காந்திஜீயின் மறைவு நாள் ஜனவரி 30-ல் தொடங்கி அவரது அஸ்தி கரைத்த பிப்ரவரி 12 வரை, மதுரை முதல் இராமேஸ்வரம் வரை புத்தபிக்கு இஸ்தானி மற்றும் பிக்குனி லீலாவதி தலைமையில் மேற்கொள்ளப்படும் உலக அமைதி குறித்த “அமைதி யாத்திரை” (peace march) யில் பங்கெடுத்துக் கொள்வோருக்கு உணவு உறையுள் அளித்து உபசரித்தல் (பார்த்திபனூர் முதல் இராமேஸ்வரம் வரை)
11. பத்தாவது, பன்னிரெண்டாவது பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டுத் தேர்வு நடக்கும் காலங்களில் P.K.மணி ஆசிரியர் (முன்னாள் தலைமையாசிரியர் பரமக்குடி) அவர்களின் துணையோடு ஆங்கிலம் மற்றும் கணக்கு பாடங்கள் இலவசமாக டியூசன் நடத்தப்படுகிறது.
12. வடலூரில் மாணவர்களைக் கொண்டு மேட்டுக்குப்பம் சித்தி வளாகத்திரு மாளிகையில் உழவாரப் பணி அவ்வப்போது மேற்கொள்ளல்.
13. பிரதி மாதம் பூசநாள் வழிபாட்டிற்கு வடலூர் வரும் சன்மார்க்க அன்பர்களுக்கு ஆகார வசதி, தங்கும் வசதி அளிக்கப்பட்டு வருகிறது.
14. வடலூர் தருமச் சாலை வீதியில் கதவிலக்கம் 64, இராமநாதபுரம் மாவட்ட வள்ளலார் அறநிலையத்திற்கு சொந்தமான இல்லத்தில் திருஅருட்பா மற்றும் திண்டுக்கல் சுவாமி சரவானந்தா அவர்கள் அருளியுள்ள நூல்கள் பிரதி தினமும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.
15. பிரதி மாசப் பூசம் தோறும் மேட்டுக்குப்பம் சித்தி வளாகத் திருமாளிகையில் திருஅருட்பா மற்றும் திண்டுக்கல் சுவாமி சரவணானந்த உரை விளக்க நூல்களை சன்மார்க்க அன்பார்க்கு கிடைக்கும் வண்ணம் விற்பனைக்கு வைத்தல்.
16. திருவண்ணாமலை பிரதி மாதம் பௌர்ணமி நாள் கிரிவலவிழாவில் திருஅருட்பா மற்றும் சுவாமி சரவணானந்தா நூல்கள் விற்பனை செய்தல்.
17. அருட்பெரும் ஜோதி தயவாலயம், சேஷாத்திரி மகால், ஆற்றங்கரை, திருஉத்திரகோச மங்கை, இராமேஸ்வரம், வடலூர் ஆகிய ஊர்களில் நித்திய அணையாதீபம் பராமரிப்பு, ஆதரவற்ற மாணவ, மாணவியர், முதியோர் மற்றும் மூலிகைத் தோட்டம் பராமரித்து வருகிறது.
18. தென் மாவட்டங்களில் சன்மார்க்க விழாக்கள் நடக்கும் போது திருஅருட்பா மற்றும் திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா அவர்கள் அருளியுள்ள உரை விளக்க நூல்கள் விற்பனைக்கு கிடைக்கச் செய்தல்.
19. இராமேஸ்வரத்திற்கு ஆலய தரிசனத்திற்கு வரும் சன்மார்க்க அன்பர்களுக்கு அடிப்படை வசதிகள் இராமேஸ்வரம் அறநிலையக் கிளையால் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது.
20. வள்ளலாரின் சன்மார்க்க கொள்கையால் ஈர்க்கப்பட்டு வெளிநாடுகளில் இருந்து வரும் ஆன்மீக நாட்டம் கொண்ட அன்பர்களுடைய தங்கும் மனையாகவும் வடலூர் கட்டிடம் பயன்பட்டு வருகிறது. தற்போது பிரான்சிலிருந்து ஒருவரும் மொரிசியஸ் நாட்டிலிருந்து ஒருவரும் வடலூரில் தங்கி உள்ளார்கள்.
21. http://www.vallalar.org.

http://www.Saintramalingam.org மூலம் கணிணியில் திருஅருட்பா முழுமையும் காணும்படியும், 1000-க்கு மேற்பட்ட பாடல்களை இசையோடு கேட்கும் வண்ணமும் சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்ட கணிணி வட்டுக்கள் (CD) சன்மார்க்க அன்பர்களுக்கு கிடைக்கச் செய்தல். திருஅருட்பா ஒலி நாடாக்கள் விற்பனை செய்தல்.

22.”மக்கள் சாசனம்” எனும் மக்கள் நலத் திட்ட உதவிகள் விளக்க கையேடு இலவசமாக வெளியிடப்பட்டது. இதில் 18 வகை துறையின் பெயர் மற்றும் உதவி பெறும் விபரம் அடங்கிய புத்தகமாக வெளியிடப்பட்டது 7.3.2001-ல்.

23.”உடல் தள்ளாடும் வயதிலே” என்னும் நிகழ்ச்சியில் மதுரை அகில இந்திய வானொலியில் 5 முதியவர்கள் பங்கு கொண்டார்கள். இது 15.3.04-ல். இது ஜீன் மாதம் வானொலியில் ஒலி பரப்பட்டது.

24.பரமக்குடி சமரச சுத்த சன்மார்க்க சங்கமும், முதுகுளத்தூர் சமரச சுத்த சன்மார்க்க சங்கமும் இதனுடன் இணைந்தும், தனியாகவும் சேவை செய்து வருகிறது.

இவை போன்ற பல பணிகளை சிறப்பாக வள்ளலார் அறநிலையம் செய்து வருகிறது. தற்போது இது வள்ளலார் **“யுனிவர்சல் மிஷின் டிரஸ்ட்”** என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது.

# இயல் : நான்கு

## வள்ளலார் ஞானசபை

### இடமும் சூழ்நிலையும்

வள்ளலார் ஞானசபை என்பது இராமநாதபுரத்திலிருந்து 27 கிமீ தொலைவில் வடகிழக்கில் ஆற்றாங்கரை என்னும் கிராமத்தில் அமைந்த இடமாகும். இவ்விடம் வைகை ஆறும் கடலும் சந்திக்கின்ற இடமாக இருப்பதால் ‘முகத்துவாரம்’ என்றும் அழைக்கின்றனர்.

1998ம் ஆண்டு **திரு.ஜோதிமுருகன் ஐயா** அவர்கள் ஆற்றங்கரையில் முருகன் கோவில் கும்பாபிசேஷகத்திற்கு சென்றபோது அருகில் பாழடைந்து காணப்பட்ட ஒரு கட்டிடம் அவர்களின் கண்களில் தென்பட்டது. அப்போது உடன் இருந்த வைத்தியர் பாலசுப்பிரமணியம் என்பவரிடம் கேட்டபோது இக்கட்டிடம் 400 ஆண்டுகளுக்கு முன்பு நடைபயணம் செய்யும்போது தங்கும் விடுதியாக இராமநாதபுர ராஜா கட்டிய கட்டிடம் என்று கூறி இப்போது மராமத்து யாரும் பார்க்காமல் இருள் அடைந்து முள் செடிகள் முளைத்து ஆடு மாடுகள் வந்து தங்கும் மேய்ச்சல் இடமாக காணப்படுகிறது என்றார்களாம்.

அப்போது அந்த பழமை வாய்ந்த கட்டிடத்தை பார்த்தவுடன் உள்ளத்தில் ஏற்பட்ட இறைத் தூண்டலால் இராமநாதபுரம் மேன்மை தங்கிய ராணி RKP இராஜேஸ்வரி அவர்களை சந்தித்துப் பேசி வள்ளலார் அறநிலையப் பணிக்காக நீங்கள் இக்கட்டிடத்தை எங்களுக்கு தரவேண்டும் என்று கேட்டு கொண்டதற்கிணங்க ராணியும் சம்மதித்து வழங்கியுள்ளார்கள்.

பிறகு அவ்விடத்தை வள்ளலார் ஞானசபையாக மாற்றம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் மாணவ, மாணவிகளாலும் சன்மார்க்க அன்பர்களாலும், இராம பக்த சேவா சங்க இளைஞர்களாலும் தொடர்ந்த பெரும் முயற்சியின் காரணமாக இவ்விடம் இருள்சூழ்ந்த முட்கள் நிரம்பிய ஆடுமாடுகள் தங்கும் இடமாக இருந்ததை மாற்றியமைத்து இன்று கடற்கரை அருகில் அமைதியான சூழலில் இயற்கையோடு ஒன்றி வாழ்வதற்கேற்ற நிலையில் மிகுந்த அமைதி நிலவும் இடமாக திகழ்கிறது. இவ்விடம் சுமார் 21/2 ஏக்கர் பரப்பளவு கொண்ட சின்ன வடலூராக திகழ்கிறது.

**அணையா தீபம்**

6-9-1998ல் **உயர்திரு தியாகி K.P.நாகலிங்கம்** அவர்கள் தலைமையில் அணையாதீபம் ஏற்றப்பட்டு வள்ளலார் ஞானசபையாக திகழ்கிறது.

இவ்விடம் முதலில் 100 ரூபாய் வாடகைக்கு குத்தகைக்கு பெறப்பட்டு பிறகு வள்ளலார் அறநிலையத்திற்கு சொந்தமாக வாங்க ரூபாய் 2 லட்சம் கொடுத்து ராமநாதபுரம் மேன்மை தாங்கிய ராணி RKB. இராஜேஸ்வரி அவர்களிடம் இருந்து கிரயம் பெறப்பட்டுள்ளது.

பிறகு இக்கட்டிடத்திற்கு மின்சார வசதி, ஆண்கள், பெண்களுக்கு என்று தனித்தனியான கழிப்பிட வசதியும், குளியலறை வசதியும் தற்போது செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் வசதிக்கென்று 6 கிணறுகள் தோண்டப்பட்டு 3 கிணறுகளில் மோட்டார் பம்ப் வசதி செய்யப்பட்டுள்ளது. 40 அடி ஆழமுள்ள பெரிய கிணறு தோண்டி மோட்டார் பம்ப் பொறுத்தி அங்குள்ள தென்னைமரம் வேம்பு மற்றும் மூலிகை செடிகளுக்கு தண்ணீர் செலுத்த தனியாக பயன்படுத்தப்படுகிறது. மாணவர் இல்லம், முதியோர் இல்லம், சத்சங்க விசார மேடை, சமையலறை போன்ற பல வசதிகளை கொண்டதாய் திகழ்கிறது.

**மூலிகை தோட்டம்**

மஞ்சள் கரிசலாங்கண்ணி, தூது வளை, முசுமுசுக்கை, கொடிவேலி, துளசி, சிறுகுறுஞ்சான், திருகுகல்லி கற்றாழை, வெள்ளை கரிசாலை, செம்பருத்தி, நாகமல்லி, 4 வகை நந்தியா வட்டை, முல்லைபூ, சம்பங்கி, மருதாணி, வாழை, சப்போட்டா, கொய்யா, மாஞ்செடி, முடகத்தான், அரிநெல்லி போன்ற பல மூலிகைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேலும் 96 தென்னைமரம், 4 வேப்பமரம், 9 பனைமரம், 25 முருங்கைமரம், சப்போட்டா 3 மரம், 7 இடத்தில் கருவேப்பிலை செடி, பாதாமரம் 1, கொய்யா மரம் 11, பெருநெல்லி மரம் 4, வில்வமரம் 1 மற்றும் இலந்தை மரம் ஒன்றுடனும் இந்த ஞானசபை இடம் காணப்படுகிறது. ஞானசபைக் கட்டிடத்திற்கு வெளியில் 15 பனை மரமும் மணற்சார்ந்த நிலப்பரப்பும் கடல் தண்ணீருடன் காணப்படும் காட்சி கண்கொள்ளா காட்சியாக இருக்கிறது.

1. பொள்ளாச்சி ஐயா என அழைக்கப்படும் மாதவன் ஐயாவிடம் நேர்காணல். 26.9.2004. ஆற்றங்கரை, சத்தியஞான சபை.

**<u>மாணவர்கள் முதியவர்கள்</u>**

ஞானசபையில் 10 மாணவர்களும், 7 முதியோர்களும், 2 பணியாளர்களும் உள்ளனர். மாணவர்கள்

ஆற்றாங்கரை ஆரம்பப் பள்ளியிலும், அழகன்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்று வருகிறார்கள். இவர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தில் தோட்ட பராமரிப்பு மற்றும் மூலிகை பராமரிப்பு போன்ற வேளைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

முதியவர்கள் தங்களால் முடிந்த சிறுசிறு வேலைகள் செய்து ஞானசபையில் தங்கியுள்ளார்கள்.

**<u>பிற பணிகள்</u>**

ஞானசபையில் நூலகமும் நூல்கள் விற்பனை செய்யப்படுகிறது. 'சேவாபாரதி' மூலம் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. சன்மார்க்க வாழ்வியல் முகாம்கள் இங்கு நடத்தப்படுகிறது. மேலும் ஞானசபையில் 'இந்திய செஞ்சிலுவை சங்கம்' நடத்தும் ஆசிரியர்களுக்கான சிறப்பு பயிற்சி போன்றவற்றிற்கு இடமும் உணவும் அளித்து வருகிறது.

கேரளாபோல் வீடும் தோட்டமும் உள்ள பகுதியாக காணப்படுவதாலும் கடற்கரை அருகே அமைந்திருப்பதாலும் அமைதி நிறைந்த சூழலுடன் திகழ்வதால் சன்மார்க்க அன்பர்கள் தங்கி மௌனம் மற்றும் சத்விசாரம் மற்றும் தியானம் செய்யும் இடமாக திகழ்கிறது.

வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் தைப்பூச விழாவின் போது மாணவர்களை பாடல் மற்றும் பேச்சுப் போட்டியில் பங்கேற்க செய்து அவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டு வருகிறது. பிறகு அழகன்குளம் பிரேமா அவர்கள் குழுவின் தலைமையில் வள்ளலார் பாடல்கள் அடங்கிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

29.4.2003 அன்று இராமநாதபுரம் மேன்மை தங்கிய ராணி RKB இராஜேஸ்வரி அவர்கள் ஆற்றங்கரை வள்ளலார் ஞானசபை பார்வையிட்டு அதன் வளர்ச்சியையும், இயற்கை சூழலையும் போற்றி பாராட்டிவிட்டு சென்றார்கள்.

இங்கு 20க்கும் மேற்பட்ட மயில்கள் வந்து செல்கின்றன. இதற்கு சரவணன், சுப்பிரமணி, கந்தவேல் என்றும் பொன்னுமயில், இந்திரா, இந்துராணி என்று பெயர் சொல்லி அழைத்து மயில்களுக்கு உணவும் தண்ணீரும் வைக்கிறார்கள்.

மேலும் இரண்டு பசுமாடுகள் ஞானசபைக்கு தானமாக இராமநாதபுர சன்மார்க்க அன்பர் ஒருவரும், வாணி சன்மார்க்க அன்பர் ஒருவரும் வெள்ளை மற்றும் சிகப்பு நிற பசுக்களை வழங்கி உள்ளார்கள். இதற்கு அருள்ஜோதி, மங்கலம் என்று சிறப்பு பெயர் வைத்து அழைத்து பராமரித்து வருகிறார்கள்.

இங்கு ஜோதி அம்மா அவர்களும், வாசுகியம்மா மற்றும் பொள்ளாச்சி மாதவன் ஐயா அவர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

## 2. ஜோதிமுருகன் ஐயாவுடன் நேர்காணல். 25.9.2004. ஆற்றங்கரை சத்திய ஞான சபை.

**பொதுமக்கள் நன்கொடை**

இங்கு வரும் சன்மார்க்க அன்பர்கள் தனது திருமணநாள் மற்றும் பிறந்தநாள் விழாவின் போது சிறப்பு உணவுக்காக ரூபாய் 500 செலுத்தி நன்கொடையளிக்கின்றனர்.

மேலும் அழகன்குளம் பொதுமக்கள் சிலபேர், தங்களின் தகுதிற்கேற்ப சோப்பு, அரிசி, சர்க்கரை, எண்ணெய் வழங்கி சிறப்பிக்கிறார்கள்.

**மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் செய்தி**

வள்ளற்பெருமானுக்கு எப்படி வடலூர் சொந்தமோ அதைப் போல் நாங்கள் ஆற்றங்கரையில் உள்ள ஞானசபை சின்ன வடலூராக காண்கிறோம் என்று கூறுகின்றார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக நாங்கள் ஜோதிமுருகன் ஐயாவின் பணிக்கும் சேவைக்கும் பாத்தியப்பட்டவர்களாக உள்ளோம் என்கிறார்கள். ஏனென்றால் ஜோதிமுருகன் ஐயாவின் தொண்டு அடுத்தவர்களுக்கு ஆசி வழங்குவது அல்ல. மக்களின் அடிப்படை பிரச்சினையான பசிப்பிணி நீக்குதல் மற்றும் கல்வியை கற்கச் செய்தல் மேலும் வள்ளலாரின் கொள்கையை பரப்புதல். இதுவே அவரது மானிட சாதனை மற்றும் மனிதப் புரட்சி என்று கூறுகிறார் பொள்ளாச்சி மாதவன் ஐயா! ஞானசபை துவக்க காலத்தில் இருந்தே அங்கு இருப்பவர் அவர். அயராத உழைப்பாளியாக திகழ்கிறார்.

# இயல் : ஐந்து

## இராமேஸ்வரம் வள்ளலார் அறநிலையம்

## மற்றும்

## திருஉத்தரகோசமங்கை வள்ளலார் அறநிலையம்

**இராமேஸ்வரம்**

இராமநாதபுரத்திலிருந்து 57 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இராமேஸ்வரம் திருக்கோயிலின் மேற்கு கோபுரத்திற்கு வலது பக்கம் இராமநாதபுரம் இராஜா சத்திரத்தை 1998ம் ஆண்டு குத்தகைக்கு பெற்று சுமார் 50,000/- ரூபாய் செலவில் மராமத்து பணிகள் செய்து கிணறு, கழிப்பறை, குளியலறை, சமையல்கூடம், பம்புசெட் போன்றவற்றை ஏற்படுத்தி 25-5-1998ல்

**“பாரத்சேவா கிராம சங்கம்”** துறவியால் அணையாத தீபம் ஏற்றப்பட்டு துவக்கி வைக்கப்பட்டது. 1-4-98 முதல் இராஜா சத்திரத்தை குத்தகைக்கு பெற்று மாதம் 300 ரூபாய் வாடகை கொடுத்து வருகிறது.

## மாணவர்கள் & முதியவர்கள்

இங்கு 12 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். இவர்கள் அரசு மேல்நிலைப்பள்ளியிலும், அரசு துவக்கப்பள்ளி No II யிலும் கல்வி பயின்று வருகிறார்கள்.

முதியவர்கள் 6 பேர்கள் உள்ளார்கள். இவர்கள் சமையல்பணி மற்றும் சிறு சிறு வேளைகள் செய்து வருகிறார்கள்.

## நூலகம்

இராமேஸ்வரம் புனிதஸ்தலம்மாக இருப்பதால் அங்கு வரும் ஆன்மீக அன்பர்களுக்கு வள்ளலார் அருளிய திருவருட்பா புத்தகங்களும் சுவாமி திண்டுக்கல் சரவணானந்தா அருளிய புத்தகமும் மற்றும் இதர ஆன்மீக புத்தகமும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

## பணிகள்

1. சுமார் 7 செண்ட் பரப்பளவு கொண்ட இடம். இங்கு ஆடி மற்றும் தை அமாவாசை நேரங்களில் மோர் வழங்கி தாகம் தீர்க்கின்றனர்.
2. இராமநாதபுர ராசா சார்பில் தினம் 7 கிலோ அரிசி கஞ்சியாக்கி வரும் வறியவர்களுக்கு கொடுக்கப்படுகிறது.
3. யாத்திரை தளமாக இருப்பதால் சன்மார்க்க அன்பர்களுக்கு தங்கும் இட வசதியும், உணவும் வழங்கி சிறப்பு செய்கிறது.
4. Dr.பாண்டுரங்கன் ஈரோடு, Dr.V. நடராசன் சென்னை அவர்கள் மாதம் ஒருமுறை வந்து தங்கி வைத்தியம் செய்ய இடவசதி செய்து கொடுக்கப்படுகிறது.
5. இங்கு பயிலும் மாணவகளுக்கு நேசனல் மெட்ரிக்குலேசன் பள்ளி சார்பாக இலவசமாக டியூசன் சொல்லித் தரப்படுகிறது.
6. மாணவர்கள் தேவையான நேரங்களில் Dr.ராசு MBBS, Dr.செண்பகம் MBBS அவர்களிடமும் சென்று இலவசமாக மருத்துவ வசதிகளை பெற்று வருகிறார்கள். இங்கு K.S.சோமசுந்தரம் பொருப்பாளராக பணிபுரிந்து வருகிறார்.
7. மாணவர்கள் உழவாரப் பணிக்காக தேவையான நேரங்களில் ஆங்காங்கு சென்று பணியாற்றி வருகிறார்கள்.

## திரு உத்தரகோச மங்கை அறநிலையம்

இராமநாதபுரத்திலிருந்து 17 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திரு உத்தரகோச மங்கை ஆலயத்தின் வடக்கு ரத வீதியில் இராமநாதபுரம்

சமஸ்தானத்திற்கு சொந்தமான தங்கும் விடுதியை குத்தகைக்கு பெற்று சுமார் 50,000 செலவில் குளியலறை, கழிப்பறை, கிணறு, பம்புசெட் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொண்டு 28-12-2003 அன்று ஆருத்திரா தரிசனத்தின் போது சேலம் “சாது முத்தையா” அவர்களால் அணையாதீபம் ஏற்றி வைக்கப்பட்டது.

இங்கு திருமதி ரெத்தினம்மாள் பொருப்பாளராக உள்ளார். ஒரு முதியவர் மட்டும் உள்ளார். சுமார் 5 செண்ட் இடத்தை இராமநாதபுர மேன்மை தாங்கிய ராணி RKB இராஜேஸ்வரி அவர்களிடம் குத்தகைக்கு பெற்று மாதம் 100/- ரூபாய் வாடகையாக கொடுக்கப்படுகிறது.

**பணிகள்**

1. தினமும் காலை 8 மணிக்கு 3 படி அரிசியை கஞ்சியாக்கி வறியவர்களுக்கு வழங்கப்படுகிறது. இது 17-1-2004 முதல் செயல்படுத்தப்பட்டது.
2. ஆருத்திரா தரிசனத்தின் போது விரிவான அன்னதானம் வழங்கப்படுகிறது. வள்ளலார் மற்றும் சுவாமி சரவணானந்தா நூல்கள் விழாக்காலத்தில் விற்பனைக்கு வைக்கப்படுகிறது.
3. உழவாரப்பணி நிகழும் காலத்தில் மாணவ மாணவிகளுக்கும், சன்மாக்க ஊழியர்களுக்கும் உணவு மற்றும் தங்கும் இடவசதி செய்து கொடுக்கப்படுகிறது. யாத்திரை வரும் சன்மார்க்க அன்பர்களுக்கு தங்கும் வசதி, உணவு வசதி செய்து கொடுக்கப்படுகிறது.
4. 2004ம் ஆண்டு திருஅருட்பா இசைநிகழ்ச்சி நடைபெற்றது.

## நிறைவுரை

19ம் நூற்றாண்டு தந்த மகான் வள்ளலார் ஆவார். இவர் ஜீவகாருண்யமே மோட்சத்தின் திறவுகோல் என்றார். இதன் மூலம் அகில உலக சகோதரத்துவம், ஆன்மநேய ஒருமைப்பாடு, ஒரே கடவுள் வழிபாடு, கொல்லாமை, புலால் மறுத்தல் மூலம் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்தல் என்ற வள்ளலார் கொள்கைக்கிணங்க இந்த வள்ளலார் அறநிலையம் செயல்படுவதை இவ்வழி ஆய்வு மூலம் காணலாம்.

மனித மனங்களில் இரக்க உணர்வும், ஜீவகாருண்ய சிந்தனையும் வளர்க்க வேண்டும் என்ற நோக்கில் ஆதரவற்ற மாணவ மாணவிகளுக்கு கல்வி அளித்தல் மூலம் அறியப்படுகிறது. மேலும் முதியவர்களை பாதுகாப்பது சமூகத்தின் கடமை என்பதை உள்ளடக்கி முதியவர்களையும் ஆதரித்து உணவு அளித்து வருவதை காணலாம். அவர்களுக்கு இவர்களே மகனாய், மகளாய் இருந்து நல்லடக்கம் செய்த செய்தியும் ஆய்வின் மூலம் அறியமுடிகிறது.

வள்ளலார் ஏற்படுத்திய தருமச்சாலை போன்றே வள்ளலாரின் அறநிலையமும் சிறிய அளவில் தினமும் 25 பொட்டலங்கள் உணவு வழங்குவதையும், பிரதி புதன் தோறும் 125 பொட்டலங்கள் வறியவர்களுக்கு உணவு வழங்குதலையும் இவ்வழி ஆய்வு இயல் 3ல் காணமுடிகிறது. ஏழைகளின் பசிதீர்த்தலை மையமாகக் கொண்டு செயல்படுகிறது. எல்லோருக்கும் பசி என்பது தவிர்க்க முடியாதது.

**“ஒரு நாளுணவை ஒழி என்றா ஒழியாய்**
**இரு நாளைக் ஏழ்லென்றா ஏலாய்-ஒருநாளும்**

**என்னோவு அறியாய் இடும்பை கூறும்என் வயிறே**
**உன்னோடு வாழ்தல் அரிது”**

இதை பாடலாக ஒளவையார் நல்வழி நூலிலே குறிப்பிடுகிறார்.

அரசினால் மட்டுமல்லாமல் அரசு சாரா நிறுவனங்களான தொண்டு நிறுவனங்களின் மூலமும் அமைதியாக்க பணிகளைச் சிறப்பாகச் செய்ய இயலும். இதில் ஏழைகளின் பசி தீர்த்தல், ஆதரவற்றவர்களுக்கு கல்வி அளித்தல், முதியவர்களை ஆதரித்து அவர்களும் தங்களால் முயன்ற உதவிகள் செய்து பிறருக்கு உதவ முடியும் என்ற எண்ணத்தை முதியவர்களிடத்தும் ஏற்படுத்தி அவர்களை பேணிக் காப்பது நமது கட்மை என்ற உணர்வை மாணவ மாணவியர்களிடம் கூறி வளர்ப்பதும் ஆய்வில் அறிய முடிகிறது.

எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் வகையில் மயில் போன்றவற்றிற்கு உணவும், நீரும் அளித்து காப்பது, மற்றும் பசு மாடுகளை பேணி வளர்ப்பது போன்ற அன்பையும், தியாகத்தையும், தொண்டையும் காண முடிகிறது.

மாணவ, மாணவிகளுக்கு தனி மனித ஒழுக்கம், தனது வேலைகளை தானே செய்தல், தனக்கு வேண்டிய உணவை தரும் தோட்டத்தில் பணி புரியும் மனநிலை மற்றும் அறநிலையத்திற்கு வரும் அன்பர்கள் யாராக இருப்பினும் அவர்களை அன்போடும், பணிவோடும் வணக்கம் சொல்லி வரவேற்கும் முறையும் எதிர்காலத்தில் இவர்கள் உலக அமைதிக்கு வித்திடுபவர்களாய் அமைவார்கள் என்று காணமுடிகிறது.

இவர்கள் சாதி, மதம், இனம், மொழி கடந்தவர்களாய் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருடைய குழந்தைகளாய் இருந்து கல்வி பயின்று வருவதால் இவர்களால் இச்சமுதாயம் சிறிதளவாவது மாற்றம் கொண்டு தன்னளவிலாது அமைதி உடையவர்களாய் திகழ்ந்து தன்னைச் சார்ந்தவர்களையும் அமைதியடையச் செய்வார்கள் என காண முடிகிறது.

ஆகவே தனிமனித முயற்சியோடு சமுதாயமும் ஒன்றிணைந்து செயல்பட்டால் வெகு சீக்கிரமாய் உலகத்தின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என்பதனை வள்ளலார் அறநிலைய ஆய்வு வழிகாட்டுகிறது.

**சந்தோஷம்.**

## <u>கருவி நூற்பட்டியல்</u>

1. திருஅருட்பிரகாச வள்ளலார் அருளிய திருஅருட்பா ஆறாம் திருமுறை : திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையம், வடலூர் - 1999.
2. திருவருட்பாச் சிந்தனை, க.வெள்ளைவாரணனார், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் 1986.

3. ஞானக் களஞ்சியம், யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம் 2000.
4. வள்ளலார் தத்துவம், சீ.வேலுச்சாமி, வீரா.அழகிரிசாமி பல்சமய ஒற்றுமை நட்புறவு வளர்ச்சி மையம், காந்தி நினைவு அருங்காட்சியகம், மதுரை-2002.
5. தாயுமானவர், பேராசிரியர் ந.சுப்புரெட்டியார், கலைஞன் பதிப்பகம், சென்னை-2001.
6. பல்கலைக்கழக நூல், முதுகலைப்பட்டம் காந்திய சிந்தனை பாடநூல், சர்வோதயம் - 2002.
7. 5-10-1997ல் வெளியிட்ட செயல் விளக்க அறிக்கை.
8. வள்ளலார் அறநிலையம் சார்பில் வெளியிட்ட பிரசுரங்கள் (2003-2004ம் ஆண்டு)
9. அமைதி ஆக்கத்தில் தொண்டு நிறுவனங்களின் பங்கு சேவாலயா ஓர் ஆய்வு- இரா.தண்டபாணி அச்சிடப்படாத M.Phil., பட்ட ஆய்வு ஏப்ரல் 2003.
10. சன்மார்க்க சங்கங்களின் ஜீவகாருண்யப்பணி (தென்மாவட்டங்கள்) அ.யோகராஜ் அச்சிடப்படாத M.Phil., பட்ட ஆய்வு ஆகஸ்ட் 2003.

## <u>பின்னிணைப்பு -1</u>

### <u>திருமிகு ஜோதி முருகன் அவர்கள் வாழ்வும் - தத்துவமும்</u>

#### <u>பிறப்பும் கல்வியும்</u>

மதிப்பிற்குரிய சுவாமிநாதன் - ஆறுமுகத்தம்மாள் இவர்களின் மூன்றாவது தவப்புதல்வனாக 27-6-1937 ஆம் ஆண்டு 3/382 மந்திரிமேனன் தெருவில், இராமநாதபுரம் மாவட்டம் **பரமக்குடியில்** பிறந்தவர்.

பரமக்குடி காளிதாஸ் நடுநிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு வரை கல்வி பயின்று பின் சேதுபதி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் 10ஆம் வகுப்பு வரை பயின்றவர். ஏழ்மையான குடும்ப சூழலில் பிறந்தவர். இவர் 10 ஆம் ஆண்டு கல்வி படிப்பு இறுதி தேர்வின் போது ஆசிரியர் செய்த பண உதவியால் 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று பணிக்குச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பின் 1956இல் முதுகுளத்தூர் வட்டத்தில் வறுமையால், மழையால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடன் வழங்கும் பணியில் வருவாய் அதிகாரியாக பணி புரிந்தார். பின் தீர்ப்பாயத் துறையில் நிலவரிதிட்ட இலாகளில் 1962 வரை பணியாற்றினார். மேலும் வருவாய் துறையில் இளநிலை உதவியாளர், உதவியாளர், துணை வட்டாச்சியர், வட்டாச்சியர், துணை ஆட்சியாளராக பணி புரிந்து மேலும் கடலூர் மாவட்டம் காடாம்புலியூர் (பண்ருட்டி தாலுகாவில்) இறுதியாக பணிபுரிந்து 31-3-95ல் பணி ஓய்வு பெற்றார்.

#### <u>திருமணம்</u>

8-3-1961-ல் இராமேஸ்வரத்தில் வசித்து வந்த சண்முகலெட்சுமியை வாழ்க்கை துணைவியாக ஏற்று இனிதே இல்லறம் நடத்தி வாழ்ந்தார். இவர்களுக்கு 3 ஆண் குழந்தையும் 2 பெண் குழந்தையும் உள்ளனர்.

மகன்கள் குமரேசன் இராமநாதபுரம் JTO ஆக பணி (Junior Telegram Officer) புரிகிறார். ராமலிங்கம் குடும்ப நலத்துறையிலும், இராஜவீர் சுயதொழிலும், மகள் ஜோதி ஆசிரியையாக சிங்கப்பூரிலும், சிவஉமா இராமநாதபுர மாவட்ட வளர்ச்சி திட்ட இயக்குநரின் நேர்முக உதவியாளராகவும் உள்ளனர்.

வாழ்க்கை துணைவி சண்முகலெட்சுமி 1996ல் காலமானார்கள். இதைத் தொடர்ந்து இவர்களது எண்ணம், சொல், செயல் மூன்றும் வள்ளலார் அறநிலையத்திற்கென்று அர்ப்பணித்து இவரது வாழ்வு, தொண்டும் சேவையும் மையம் கொண்ட வாழ்க்கையாகி விட்டது.

இவர்களது இயற்பெயர் 'கனகசபாபதி'. இவர்களுக்கு 1960-ல் இருந்து வள்ளலார் பற்றிய சிந்தனை உள்ளத்தில் வளர ஆரம்பித்தது. பின் 1971ம் ஆண்டு முதல் ரூமேட்டிசம் எனும் நோயால் அவதிப்பட்டு கொண்டு இருக்கையில் மருத்துவமுறைகளால் குணம் ஆகாத நிலையில் இருந்த போது ஆண்டவருடைய தூண்டுதலால் 3 நாட்கள் மௌனம் மேற்கொண்டு இருந்த போது அந்நோயின் தன்மை குறைந்து காணப்பட்டது. அதிலிருந்து வள்ளலார் மீது அதிக ஈடுபாடு கொண்டு சேவையாற்றி தன்னுடைய பெயரை **'ஜோதிமுருகன்'** என மாற்றிக் கொண்டார்கள். 1971-ம் ஆண்டில் பெயர் மாற்றம் ஆயிற்று.

பின் அறிவு விளங்கிய மனிதர்களுக்கு ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்ற வள்ளலார் கோட்பாட்டுக்கிணங்க சன்மார்க்கிகளின் உதவியோடு இன்று வரை வள்ளலார் அறநிலையத்தின் தலைவராக இருந்து செயல்பட்டு வருகிறார்கள்.

**<u>கிடைத்த சேவை சான்றுகள்</u>**

1. இராமநாதபுரம் ரோட்டரி கிளப் மூலம் சேவையை பாராட்டி சான்று வழங்கியுள்ளார்கள்.
2. வேலூர் சன்மார்க்க சங்கங்கள் பாராட்டியுள்ளது.
3. மும்மணிகள் விழாவில் அரச குடும்பத்தினத்தினர் விருது கொடுத்து கௌரவித்துள்ளார்கள்.
4. தமிழகத்தில் வெளியிட்ட சன்மார்க்க புத்தகத்தில் 80 பேர்களில் ஐயா ஒருவராக இடம் பெற்று சிறப்பிக்கின்றார்.

**<u>இலட்சியம்</u>**

வள்ளலாரின் கொள்கைகளை உலகமெலாம் பரப்பி உலக சகோதரத்துவம், ஆன்மநேய ஒருமைப்பாடு, கடவுள் ஒருவரே, ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்ற செய்திகளை உலகத்திற்கு கொண்டு செல்வதே முக்கிய லட்சியமாகவும் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள்.

**வாழ்க வளமுடன்**

**சந்தோஷம்**

தயவு.

## பின்னிணைப்பு - II

# வள்ளலார் அறநிலைய அமைப்புகள் இருப்பிட விபரம்

| வரிசை எண் | தலைமையிடம் | துவக்கம் ஆண்டு | தொலைபேசி எண்கள் |
|---|---|---|---|
| 1. | அருட்பெருஞ்ஜோதி தயவாலயம்<br>தேவிபட்டினம் சாலை, கேணிக்கரை,<br>இராமநாதபுரம் - 623504. | 6-10-1991 | 04567-221368 |
| 2. | கிளைகள்<br>வள்ளலார் அறநிலையம்<br>சேஷாத்திரி மெமோரியல் ஹால்<br>முகவை ஊரணி மேற்கு,<br>இராமநாதபுரம்-623501. | 1-9-1997 | 04567-220278 |
| 3. | வள்ளலார் அறநிலையம்<br>மேலக்கோபுர வாசல்,<br>இராமேஸ்வரம்-623726 | 25-5-1998 | 04567-222087 |
| 4. | வள்ளலார் ஞானசபை<br>ஆற்றங்கரை (கிராமம்)<br>பின்கோடு-623 512.<br>இராமநாதபுரம் வட்டம் & மாவட்டம் | 6-9-1998 | 04567-266997 |
| 5. | வள்ளலார் அறநிலையம்<br>வடக்கு ரதவீதி<br>திருஉத்தரகோசமங்கை,<br>இராமநாதபுரம் மாவட்டம். | 28-12-2003 | 04567-256444 |
| 6. | வள்ளலார் அறநிலையம்<br>64, தருமச்சாலை வீதி<br>வடலூர் - 607 303<br>கடலூர் மாவட்டம் | 10-5-1995 | 04142-299710 |

ஜோதிமுருகன்
டெபுடி கலெக்டர்
(ஓய்வு)
**தலைவர்**

ஏ.எம்.வேலு
கால்நடை பராமரிப்பு
அலுவலர்(ஓய்வு)
**செயலாளர்**

வி.கிருஷ்ணன்
நிலவளவை
அலுவலகம்(ஓய்வு)
**பொருளாளர்**

**அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை**

**அருட்பெருஞ்ஜோதி**
**அருட்பெருஞ்ஜோதி**

சந்தோஷம்

தயவு

## பின்னிணைப்பு - III

**இராமநாதபுரம் வள்ளலார் அறநிலையம் மாணவர்கள் முதியோர் விபரங்கள்**

| வ. எண் | கிளை நிலையம் விபரங்கள் | மாணவர்கள் | | முதியோர் | | பணியாளர் | | Total |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் | |
| 1. | சேஷாத்திரி மஹால் இராமநாதபுரம் | 14 | 2 | 1 | 4 | 1 | 3 | 25 |
| 2. | அருட்பெருஞ்சோதி தயவாலயம் இராமநாதபுரம் | 2 | - | 1 | 1 | - | - | 4 |
| 3. | வள்ளலார் ஞான சபை ஆற்றங்கரை | 10 | - | 3 | 4 | 1 | 1 | 19 |
| 4. | திருஉத்தரகோச மங்கை | - | - | 1 | 2 | - | - | 3 |
| 5. | இராமேஸ்வரம் | 12 | - | 3 | 3 | - | - | 18 |
| 6. | வடலூர் | 1 | - | 3 | 2 | - | - | 6 |
| | இக மொத்தம் | 39 | 2 | 12 | 15 | 2 | 4 | 75 |

22-09-2004ல் உள்ள மாணவர்கள் முதியவர்கள் பணியாளர்கள் அடங்கிய விபர அட்டவணை

## பின்னிணைப்பு - IV

**பள்ளி நாட்களில் மாணவர்களின் நேர ஒதுக்கீடு**

**காலை**

| | |
|---|---|
| 5.30AM | குழந்தைகள் எழுந்திருத்தல் |
| 6.00 To 6.30A.M | ஒளி வழிபாடு |
| 10.30To 7.30A.M | துப்புரவுப் பணியும், உடலுழைப்பும் |
| 7.30 To 8.00A.M | படிப்பு நேரம் |
| 8.00 To 8.30A.M | காலை உணவு |
| 8.30 To 12.30A.M | பள்ளிக்கு செல்லுதல் |
| 12.30 To 1.00 P.M | மதிய உணவு |

| | |
|---|---|
| 1.00 To 4.30 P.M | பள்ளிக்கு செல்லுதல் |
| 4.30 To 6.00 P.M | விளையாட்டு,தோட்டவேலை தன்வேலை |
| 6.00 To 6.30 P.M | ஒளி வழிபாடு |
| 6.30 To 8.30 P.M | படிப்பு நேரம் |
| 8.30 To 9.00 P.M | இரவு உணவு |
| 9.00 To 9.30 P.M | பொருப்பாளர்களுடன் கலந்துஉரையாடல் |
| 9.30 P.M பின் | உறக்கம் |

**விடுமுறை நாட்களில்**

காலை 9 மணி முதல் 12.30 வரையும் பிற்பகல் 1.30 மணி முதல் 4.30 மணி வரை தோட்ட வேலையும், மூலிகை பராமரிப்பும் செய்கின்றனர். வேலை முடிந்ததும் விளையாடுகின்றார்கள்.

தினந்தோறும் 3 வேளை உணவு அருந்தும் போது அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி என்னும் தாரக மந்திரத்தை ஓதி விட்டு உணவு சாப்பிடுகிறார்கள்.

## பின்னிணைப்பு - V

**வடலூர் அறநிலையம்**

வடலூர் தருமச் சாலை வீதியில் கதவிலக்கம் எண் 64ல் உள்ள கட்டிடத்தினை மேல் கட்டுக்கோப்பு மட்டும் குத்தகைக்கு பெறப்பட்டு வருடத்திற்கு 1200/- ரூபாய் வாடகை செலுத்தி வருகிறது. கீழ்தளம் அடிமனை வள்ளலாரின் தருமச்சாலைக்கு பாத்தியப்பட்டது.

இது 40 வருடத்திற்கு முந்திய கட்டிடம் ஆதலால் 25,000/- ரூபாய்க்கு மேல் பராமரித்து பணிகள் செய்யப்பட்டு குளியலறை, கழிப்பறை, தங்கும் இடவசதி மற்றும் பஞ்சாயத்து மூலம் குடிதண்ணீர் வசதியும் பெறப்பட்டுள்ளது. இங்கு

10-5-1995ல் சன்மார்க்கி **க.சிவகுருநாதன்** அவர்கள் அணையா தீபம் ஏற்றி துவக்கி வைத்தார்கள்.

**பணிகள்**

தைப்பூசத்தின் போது தொடர் 3 நாள் விரிவான அன்னதானம் வழங்கப்படுகிறது. தைப்பூச முதல் நாள், தைப்பூசம், தைப்பூசம் மறுநாள் ஆகிய தினங்களில் விரிவான அன்னதானம் வழங்கப்படுகிறது.

நூலகம் மற்றும் விற்பனை பிரிவுடன் கூடியதாக எப்போதும் செயல்படக் கூடியதாகவும் திகழ்கிறது. வள்ளலார் திருவருட்பா நூல்களும் மற்றும் திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா நூல்களும் விற்பனைக்கு உள்ளது.

தைப்பூசத்திற்கும் வரும் அன்பர்களுக்கு கம்யூட்டர் CD மூலம் படம் காண்பிக்கப்படுகிறது.

வெளிநாட்டிலிருந்தும், தமிழகமெங்கும் இருந்து வரும் சன்மார்க்க அன்பர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படுகிறது.

இங்கு பொறுப்பாளராக ஜோதி காளிதாசன் அவர்கள் இருக்கிறார். இவ்விடம் சுமார் 4000 சதுர அடி கொண்ட மனை இடமாக இந்த வடலூர் வள்ளலார் அறநிலையம் செயல்படுகிறது.

## பின்னிணைப்பு - VI

### மாணவர்கள் தினமும் பாடும் திருஅருட்பா பிரார்த்தனைப் பாடல்கள்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

1. ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்றா
 உத்தமர் தம் உறவு வேண்டும்
 உள் ஒன்று வைத்து புறம்மொன்று பேசுவார்
 உறவு கலவாமை வேண்டும்
 பெருமை பெறு நினது புகழ் பேசவேண்டும் பொய்மை
 பேசாதிருக்க வேண்டும்
 பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
 பிடியாதிருக்க வேண்டும்
 மருவு பெண் ஆசையை மறக்கவே வேண்டும் உனை
 மறவாதிருக்க வேண்டும்
 மதி வேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
 வாழ்வில் நான் வாழ வேண்டும்
 தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர்
 தலம் ஓங்கு கந்தவேளே
 தண்முகத் துய்ய மணி உண்முகச் சைவ மணி
 சண்முகத் தெய்வமணியே.

2. காராய வண்ண மணிவண்ண கண்ண கனசங்கு சங்ரதரநீள்
 சீராய தூய மலர்வாய நேய ஸ்ரீராம ராம வெனவே
 தாராய வாழ்வு தருநெஞ்சு சூழ்க தாமோதராய நமவோம்
 நாராயணாய நமவாமனாய நமசேசவாய நமவே.

3. அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
 அன்பெனும் குடில்புகும் அரசே
 அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
 அன்பெனும் கரத்தமர் அமுதே
 அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே

அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புருவாம் பர சிவமே.

4. பொழுது விடிந்தது என் உள்ளமென் கமலம்
பூத்தது பொன்னொளி பொங்கியது எங்கும்
தொழுது நிற்கின்றனன் செய்பணி எல்லாம்
சொல்லுதல் வேண்டும் என் வல்ல சற்குருவே
முழுதும் ஆனான் என ஆகம வேத
முறைகள் எலாம் மொழிகின்ற முன்னவனே
எழுதல் அரியசீர் அருட் பெருஞ்சோதி
என் தந்தையே பள்ளி எழுந்தருள்வாயே.

5. திருவிளங்க சிவயோக சித்தியெலாம் விளங்க
சிவஞான நிலை விளங்க சிவானுபவம் விளங்கத்
தெருவிளக்கு திருத்தில்லைத் திருச் சிற்றம்பலத்தே
திருக்கூத்து விளங்க ஒளி சிறந்த திருவிளக்கே
உருவிளங்க உயிர் விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்க அருள் உதவு பெருந்தாயாம்
மருவிளங்கு குழல் வல்லி மகிழ்தொருபால் விளங்க
வயங்குமணிப் பொது விளங்க வளர்ந்த சிவக் கொழுந்தே

6. அருள்விளக்கே அருட்சுடரே அருட் ஜோதிச் சிவமே
அருள் அமுதே அருள் நிறைவே அருள்வடிவப் பொருளே
இருள் கடிந்தென் உளமுழுதும் இடம் கொண்ட பதியே
என் அறிவே என் உயிரே எனக்கினிய உறவே
மருள் கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில் நடம் புரிகின்ற மணவாளா எனக்கே
தெருள் அளித்த திருவாளா ஞான உருவாளா
தெய்வநடத்து அரசே நான் செய்மொழி ஏற்றருளே

7. அருட்ஜோதித் தெய்வம் எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரும் மறைகள் எலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம் உயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கி ஒளி ஈந்தருளும் தெய்வம்
எண்ணிய நான் எண்ணியவா றெனக்கருளும் தெய்வம்
தெருட்பாடல் உவந் தெனையும் சிவமாக்கும் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்

8. தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னை நிகரில்லாத தனித்தலைமைத் தெய்வம்

வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
மலரடியென் சென்னிமிசை வைத்த பெருந் தெய்வம்
சேயாக எனை வளர்க்கும் தெய்வமகா தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

9. உலகநிலை முழுதாகி ஆங்காங்குள்ள
உயிராக உயிர்க்குயிராம் ஒளிதானாகி
கலகநிலை அறியாத காட்சியாகிக்
கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ணதாகி
இங்கு சிதாகாசமதாய்ப் பரமாகாச
இயல்பாகி இணையென்னும் இல்லாதாகி
அலகில் அறிவு ஆனந்தமாகிச் சக்தி
தானந்த மயமாகி அமர்ந்த தேவே.

10. அருளுடைய பரம்பொருளே மன்றிலாடும்
ஆனந்தப் பெருவாழ்வே அன்புளோர் தம்
தெருளுடைய உளம் முழுதும் கோயில் கொண்ட
சிவமே மெய் அறிவுருவாம் தெய்வமே இம்
மருளுடைய மனப்பேதை நாயினேன் செய்
வன்பிழையைச் சிறிதேனும் மதித்தியாயில்
இருளுடைய பவக்கடல் விட்டு ஏறேன் என்னை
ஏற்றுவதற்கு எண்ணுக என் இன்பத் தேவே.

11. அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்க்கு எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கனமும் நான் சென்றே
எந்தை நினது அருட்புகழை இயம்பிடல் வேண்டும்
செப்பாத மேல்நிலையில் சுத்த சிவமார்க்கம்
திகழ்தோங்க அருள்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான் செயினும் நீ பொறுத்தல் வேண்டும்
தலைவா நினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே.

12. மறைமுடி விளக்கே போற்றி மாணிக்க மலையே போற்றி
கறை மணி கண்ட போற்றி கண்ணுதற் கரும்பே போற்றி
பிறைமுடிச் சடை கொண்டோங்கும் பேரருட்குன்றே போற்றி
சிறை தவிர்த் தெனையாய் கொண்ட சிவசிவ போற்றி போற்றி

13. கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே

மென்காற்றில் வீசுசுகமே சுகத்திலுரும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேயென் அலங்கலணிந் தருளே.

14. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்வர்க்கும் கண்ணனுக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்க்கும் பொல்லார்க்கும் நாடுகின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே
என்னரசே யான்புகழும் இசையுமணிந்தருளே.

15. பாட்டுவித்தால் பாடுகின்றேன் பணிவித்தால்
பணிகின்றேன் பதியே நின்னைக்
கூட்டுவித்தால் கூடுகின்றேன் குழைவித்தால்
குழைகின்றேன் குறித்த ஊணை
ஊட்டுவித்தால் உண்கின்றேன் உறங்குவித்தால்
உறங்குகின்றேன் உறங்காது என்றும்
ஆட்டுவித்தால் ஆடுகின்றேன் அந்தோவிச்
சிறியேனால் ஆவது என்னே!

16. மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒரு சிறி தென்னும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும் நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்னறுள் வலத்தால்
இசைத்தபோது இசைத்தபோ தெல்லாம்
நண்ணுமவ் வருத்தம் தவிர்க்க நல் வரந்தான்
நல்குதல் எனக்கிசை என்தாய்!

17. வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோறு இரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோரென்
கேடுறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைகளாய் நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.

18. பொங்குபல சமயமெனும் நதிகளெல்லாம்
புகுந்துகலன் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குரை காணாத கடலே எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்
தங்க நிழல் பரப்பிமயல் சோடையெல்லாம்
தணிக்கின்ற தருவே பூந்தடமே ஞானச்

செங்குமுதம் மலரவரும் மதியே யெல்லாம்
செய்யவல்ல கடவுளே தேவ தேவே.

19. ஒருமையின் உலகெலாம் ஓங்குக எனவே
ஊதின சின்னங்கள் ஊதின சங்கம்
பெருமை கொள் சமரச சுத்த சன் மார்க்கப்
பெரும்புகழ் பேசினர் பெரியவர் சூழ்ந்தார்
அருமையும் எளிமையும் ஆகியன் றாகி

அம்பலத் தேசித்தி ஆடல் செய் பதியே
இருமையும் அளித்தவென் அருட்பெருஞ் ஜோதி
என்னர சேபள்ளி எழுந்தருள் வாயே!

20. என்னுயிர் நீ என்னுயிர்க்கோர் உயிரும் நீயென்
இன்னுயிர்க்குத் துணைவன் நீ என்னை ஈன்ற
அன்னை நீ என்னுடைய அப்பன் நீ யென்
அரும்பொருள் நீ என் இதயத்து அன்பும் நீ யென்
நன்னெறி நீ எனக்குரிய உறவும் நீ யென்
நற்குரு நீ எனைக்கலந்த நட்பும் நீ யென்
தன்னுடைய வாழ்வும் நீ என்னைக் காக்கும்
தலைவன் நீ கண்மூன்று தழைத்த தேவே.

21. அருட்பெரு வெளியில் அருட்பெரு உலகத்து
அருட்பெரும் தலத்து மேல் நிலையில்
அருட்பெரும் பீடத்து அருப்பெருவடியில்
அருட்பெரும் திருவிலே அமர்ந்த
அருட்பெரும் பதியே அரும்பெரும் பதியே
அருட்பெரும் சித்தி என் அமுதே
அருட்பெரும் களிப்பே அருட்பெரும் சுகமே
அருட்பெருஞ்ஜோதி என் அரசே.

22. புண்படா உடம்பும் புரைபடா மனமும்
பொய் படா ஒழுக்கமும் பொருந்திக்
கண்படாது இரவும் பகலும் நின்தனையே
கருத்தில் வைத்து ஏத்துதற்கிசைந்தேன்
உண்பனே எனினும் உடுப்பனே எனினும்
உலகரை நம்பிலேன் எனது
நண்பனே நலஞ்சார் பண்பனே உனையே
நம்பினேன் கைவிடல் எனையே

குறிப்பு

மாதப்பூசந் தோறும் அருட்பெரும்ஜோதி அகவல் முழுவதும் பாடி மகிழ்ந்து மாணவர்கள் உணவு அருந்தச் செல்கிறார்கள்.

* இப்பாடல் முழுவதும் தொகுத்து வழங்கியவர் புலவர் அடியன் **திரு.மணிவாசகம் - பத்மலோசினி,** கிருவை குண்டம் - தூத்துக்குடி மாவட்டம்.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

தயவு